Registered as a Newspaper in Ceylon — விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி — National Tamil Daily

மலர் 8 — (27-11-66) — இதழ் 287

பராபவ ஷஃபான் 13 கார்த்திகை 12 ஞாயிற்றுக்கிழமை

முல்லா பீடிகள்
MULLA BEEDIES JAFFNA
MULLA BEEDIES
யாழ்ப்பாணம் முல்லா பீடிகள்
TRADE MARK REGD. No. 24566
முல்லா பீடி ஜஃனா
MULLA BEEDI CO. JAFFNA

ஈழநாடு
சந்தா விபரம்
இலங்கை-இந்தியா
ஒரு வருடம் ரூ. 50-00
ஆறு மாதம் ரூ. 26-00
மூன்று மாதம் ரூ. 14-00
மலேசியா
ஒரு வருடம் ரூ. 70-00
ஆறு மாதம் ரூ. 38-50
மூன்று மாதம் ரூ. 20-50
தினசரி பிரதி: 10 சதம்
வாரப் பதிப்பு பிரதி 20 சதம்

# மாவட்ட சபைகள்: நிலைமை மாறவில்லை

## ஆனால் மசோதா வருவதில் தாமதம் ஏற்படலாம்

### அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம்

கொழும்பு, சனி

மாவட்ட சபைகள் மசோதா முன்னர் எதிர்பார்த்தபடி டிசம்பர் மாதத்துக்குள் பாரிமென்டில் சமர்ப்பிக்கப்பட மாட்டாதென்றும் ஆனால் பாரிமென்டின் இப்போதைய கூட்டத்தொடர் முடிவடைவதற்குள் மாவட்டசபைகள் மசோதா கொண்டு வரப்படுமென்றும் நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரிவருகிறது.

மாவட்ட சபைகள் மசோதாவுக்கு அரசாங்க பாரிமென்டரிக் குழுவின் சம்மதத்தைப் பெறும் பொறுப்பை பிரதமர் ஏற்றுக்கொள்வாரென்றும் அறியப்படுகிறது.

பிரதமருக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்குமிடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது மாவட்டசபைகள் மசோதா பற்றியும் பேசப்பட்டதாக அறியப்படுகிறது. இப்பேச்சுவார்த்தைகளின் பின்னர் தேசிய அரசாங்கத்தில் நெருக்கடி எதையும் ஏற்படுத்தக்கூடிய முறையில் தமிழரசுக் கட்சியினர் நடந்துகொள்ளக்கூடாதென்றும், அமைச்சர் பதவியிலிருந்து திரு. எம். திருச்செல்வம் விலகுவதில்லையென்றும் தீர்மானித்ததாக அறியப்படுகிறது.

மாவட்ட சபைகள் மசோதா பாரிமென்டில் சமர்ப்பிக்கப்படும்வரை தமிழரசுக்கட்சி எம். பி. க்களோ, பிரமுகர்களோ 'மாவட்டசபைகள்' பற்றி பொதுமேடைகளில் அதிகம் பேசவும் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடவும் கூடாதென்று திரு. செல்வநாயகம் அவர்கள் கேட்டுக் கொள்ளக்கூடுமென்றும் நம்

(8-ம் பக்கம் பார்க்க)

## உதவிப்பொலிஸ் அதிபர் யாழ்ப்பாணம் வருகிறார்

திருநெல்வேலி, ஞாயிறு

இலங்கை உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு அலெக் அபயகுணவர்த்தன உத்தியோக பூர்வமாக யாழ்ப்பாணத்திற்கு அடுத்த மாதம் 9-ம் திகதி விஜயம் செய்யவிருக்கிறார். வடமாகாணப் பொலிஸ் நிலையங்களை பார்வையிடும் பொருட்டு இந்த விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இவர் இரண்டு தினங்களுக்கு யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார் எனத் தெரிகின்றது.

கிரிக்கெட் டெஸ்ட்

## பாகிஸ்தான் 4:304

கராச்சி, நவ. 26

இலங்கை கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்குமிடையில் நேற்று இங்கு ஆரம்பமான இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இன்று துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் கோஷ்டி 4 விக்கெட்டை இழந்து 304 ரன்களை எடுத்தது. இலங்கை நேற்று சகல விக்கெட்டுகளையும் இழந்து 178 ரன்களை எடுத்திருந்தது.

## சென்னை மேயர் தெரிவு

சென்னை, நவ. 26

சென்னை மாநகரசபை மேயர் மைனர் மோசஸின் பதவிக்காலம் முடிவடைந்துவிட்டதைத் தொடர்ந்து புதிய மேயர் தெரிவு இம் மாதம் 29-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இத்தேர்தலில் இரா. சம்பந்தம், கோவிந்தசாமி, ஆறுமுகம், புருஷோத்தமன் ஆகிய உறுப்பினர்கள் போட்டியிட இருப்பதாக அறியப்படுகிறது.

## நெல் உற்பத்திப் போட்டி விவசாயப்பகுதி நடாத்தும்

கொழும்பு, சனி

நாடு முழுவதுக்குமான நெல் உற்பத்திப் போட்டி ஒன்றை வருடா வருடம் நடத்த விவசாயப் பகுதி திட்டமிட்டுள்ளது.

நவீன முறைகளைக் கையாண்டு அதிக நெல்விளைச்சலைச் செய்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுமென்றும் இதனால் விவசாயிகளுக்குப் போதிய ஊக்கமளிக்கப்பட்டு உணவு உற்பத்தி அதிகரிக்குமென்றும் நம்பப்படுகிறது.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு ரூபா 1 லட்சம் வரையான பரிசுகள் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "சிந்திக்க நேரமில்லை செயலில் இறங்குவோம்"

### ஆலயப் பிரவேசத்துக்கு முடிவுகட்ட தமிழரசு சாதி ஒழிப்புக்குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"ஆலயப்பிரவேசம் சரியா, பிழையா என்பது பற்றி இனிச் சிந்திக்க அவகாசமில்லை. சைவப் பெரியார்களின் மனதை மாற்றி ஆலயப்பிரவேசத்தை நடாத்த தயாராக வேண்டும்."

தமிழரசுக்கட்சியின் சாதி ஒழிப்புக் குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சிக் காரியாலயத்தில் முன்னாள் செனட்டர் திரு. ஜி நல்லையாவின் தலைமையில் இக்குழுவின் கூட்டம் நடைபெற்றது.

சாவகச்சேரித் தொகுதியில் விரைவில் நடாத்துவதாக இருந்த தேநீர்க்கடைப் பிரவேசத்தை சில வாரங்களுக்கு பின்போடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு எம். பி.யும் தமது தொகுதியில் சாதிக் கொடுமையை ஒழிக்க என்னென்ன நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பது பற்றி 2 வாரங்களுக்குள் காரியதரிசி திரு. வின்சென்டிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட இரண்டு உபகுழுக்களும் (ஆலயப் பிரவேசக் குழு, தேநீர்க்கடைப் பிரவேசக்குழு) தீவிரமாக செயலில் இறங்கவேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## சாதிக்கொடுமை நீங்க புரட்சி வேண்டுமாம்

### சுன்னாகத்தில் சண்முகதாசன்

உடுவில், சனி

கே. ஏ. சுப்பிரமணியம் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரு. சண்முகதாசன் மேலும் குறிப்பிட்டதாவது:

"இந்த நாட்டிலே மிக விரைவில் தொழிலாளி வர்க்க அரசாங்கம் ஒன்று உதயமாகப் போகிறது. இன்று நாட்டு மக்களிடையே காணப்படும் விழிப்புணர்ச்சிதான் ஒன்றுபட்ட தொழிலாளர் சோஷலிஸ அரசினை ஸ்தாபிக்கப் போகிறது. இன்று எழுச்சிபெற்று மனித உரிமை கோரி நிற்கும் தொழிலாளர் வர்க்கத்தை சில ஏகாதிபத்திய பிற்போக்குவாதிகள், மனிதத்தன்மையற்று தாக்குதல் மேற்கொண்டு வந்துள்ள போதிலும், தொழிலாளர் அரசு ஸ்தாபிக்கப்படும் காலத்தில் இந்தப்பிற்போக்குவாதிகள் மனிதத்தன்மையுடன் சகல உரிமைகளும் பெற்றுத்தான் வாழப் போகிறார்கள்."

இவ்வாறு நேற்று மாலை சுன்னாகம் சந்தை மைதானத்தில் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி (சீனச்சார்பு) யினரால் ஒழுங்கு செய்யப்பட்ட தீண்டாமை ஒழிப்புப் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. என். சண்முகதாசன் கூறினார். திரு.

அடக்குமுறை எங்கு காணப்படுகிறதோ அங்கு தான் புரட்சி மின்வேகத்தில் வளரும். இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்று கூறிக் கொள்ளும் அதே வேளையில், மனித உரிமை வேண்டி நிற்கும் மக்கள் மேல் தடி கொண்டு தாக்குவதுதானா ஜனநாயகப் பண்பு? பொங்கி எழும் விவசாயிகள்—தொழிலாளர்கள் ஒன்று திரண்டால் இந்த நாட்டுப் படைகளைக் கொண்டுமட்டுமல்ல, வெளிநாட்டிலிருந்து படைகளை இறக்குமதி செய்துகூட அடக்கிவிட முடியாது.

முற்றிலும் வேறுபட்ட கொள்கையுடைய கே. எம் பி. ராஜரட்ண—தொண்டமான்; சி. பி. டி. சில்வா—பிலிப் குணவர்த்தனா; செல்வநாயகம்—பொன்னம்பலம் இன்று ஒரே அரசில் அங்கம் வகிக்கின்றனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு
டாலர் அலுமினியம்
ONE-DOLLAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

**சப்ளேயர்!**
"ஈழநாடு" காரியாலய "கன்ரீனுக்கு" தேநீர்க் கடை அனுபவமுள்ள ளையர் தேவை. நேரில்வரவும். அ. சிவானந்தன், ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம் 1175

**பில் கிளாக்!**
பில் கிளாக் (Bill Clerk) தேவை. வயசு இருபதுக்கு மேற்படாத ஆண்கள் மாத்திரம் நேரில்வரவும். அருணு ஏஜென்சீஸ், அளவெட்டி. 1176

**பெண்கள்!**
நெசவுவேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. உடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். யாழ்ப்பாண நெசவுநிலையம், 95, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1172

**கணக்கப்பிள்ளை!**
அனுபவமுள்ள கணக்கப்பிள்ளை தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். எஸ். ஏ. எஸ். ஹமீட். 95, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் 1173

**மனேஜர்!**
யாழ்ப்பாணத்தில் உள்ள வியாபார ஸ்தாபனத்திற்கு நேர்மை, நம்பிக்கை, வியாபார அனுபவமுள்ள நடுத்தர வயதினராகவும் உள்ள மனேஜர் தேவை. பிணைப்பணம்! ரொக்கம் 1500/-. மாதம் ஒன்றுக்கு ரூபா 100/- தகுதிக்கேற்ற உயர்வு உண்டு. 30-ந் திகதிக்குள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2008, ஈழநாடு. மே/பா என எழுதி மூலம் விண்ணப்பிக்கவும். 2008

## சேவை

**தையல் மெஷின்:**
தையல் மெஷின்-பெற்றோமாக்ஸ் உங்கள் திருப்திக்குத் திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களும் பெற்றுக் கொள்ளலாம். அருணு ஏஜென்சீஸ், அளவெட்டி. 1461

## விற்பனைக்கு

**கோழிக்குஞ்சுகள்!**
உயர்ந்த இனக் குஞ்சுகள், நிதானமானவிலைகள். இலாபம் எங்கும் 100% இலாபம். பத்துக் கோழிகளால் பெறும் வருமானத்தை ஒரு கோழி உங்களுக்குக்கொடுக்கும். மேலும் மேலும் உங்களையும் உங்கள் அயலவரையும் ஊக்குவிக்கும். எம்மிடம் மருந்துகளும் பெற்றுக் கொள்ளலாம். அருணு ஏஜென்சீஸ், அளவெட்டி. 1493

**காணி!**
இனிநொச்சி 5-ம் வாய்க்காலில் 10 1/4 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. இதில் 3/4 ஏக்கரில் தென்னைமரமுண்டு. மிகுதி நெற்காணி விபரங்கட்கு: ஜெயரட்ணம் 89, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டிக்குளி. 1174


## வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு, சிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றுநோக் இலவம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் வசிபூர ஞானந்தர் J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
**பாசம்**

**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
**கல்யாண பரிசு**

**2வது வெற்றி வாரம்!**
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) மொடேர்ண் (பதுளை) விஜிதா (ஹட்டன்)



**சிவாஜி கணேசன், தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
**ஆண்டவன் கட்டளை**
[இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி]
டைரக்ஷன்: சங்கர்


# திரு. தியாகராஜா 'இலங்கை கட்டழகன்'

கொழும்பு, சனி
யாழ்ப்பாணம் 'பாரியல் கிளப்' பைச் சேர்ந்த திரு. எம். ஏ. தியாகராஜா 'இலங்கை கட்டழகனுக' தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நடைபெற்ற 'இலங்கை கட்டழகன்' (மிஸ்டர் சிலோன்) போட்டியில் இலங்கை கட்டழகனுக தியாகராஜா தெரிவு செய்யப்பட்டார். இரண்டாவதாக திரு. ஜே. எல். பேரீட் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. தியாகராஜா முன்னர் யாழ்ப்பாணக் கட்டழகனுக பல முறை தெரிவு செய்யப்பட்டவர். ஆசிய கட்டழகன் போட்டியில் கலந்து கொண்டு உயர்ந்தோர் பிரிவில் முதலிடம் பெற்றவர். யாழ்ப்பாண சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவரான திரு. தியாகராஜா இப்போது கண்டி மாநகர சபையில் பணியாற்றுகிருர்.

## யானைகள் மதிப்பீடு

கொழும்பு, சனி
இலங்கையிலுள்ள யானைகளின் எண்ணிக்கை மதிப்பீடு அடுத்த வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இந்த மதிப்பீட்டில் சுவிற்சர்லாந்து வனவிலங்கியல் நிபுணர் திரு. எம். கூர்ட், அமெரிக்க நிபுணர் திரு. ஜோர்ஜ். எஸ். மக்கே ஆகியோர் இலங்கைக்கு உதவுவார்கள். இலங்கை வனபரிபாலனப் பகுதியைச் சேர்ந்த பல உத்தியோகத்தர்கள் இந்த மதிப்பீட்டில் கலந்துகொள்ள இருக்கிருர்கள்.

மூன்று வருடகாலத்துக்கு இந்த மதிப்பீடு நடைபெற இருக்கிறது.

## "நேருவை வரலாறு மறைக்காது"

உடுப்பிட்டி, சனி
"ஜவஹர்லால் நேருவின் அரசியல் சேவையை, மக்கள் பிற்காலத்தில் மறந்துவிட நேர்ந்தாலும், வரலாற்றுக்கு அவர் செய்த சேவையை வரலாற்று ஏடுகள் மறைத்துவிட முடியாது."

இவ்வாறு நெல்லியடியில் நடைபெற்ற கலைச் சுவைஞர் சங்க மாதாந்தக் கூட்டத்தில் திரு க. கனகரத்தினம், ஜவஹர்லால் நேரு பற்றிப் பேசுகையில் கூறினுர். கழகத் தலைவர் திரு. வே. க. நடராசா தலைமை தாங்கினுர்.


**நியூ காலிங்கஸ்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஜெமினி - சாவித்திரி
நடித்த
**கற்பகம்**

**மகாத்மா தியேட்டர்**
தெல்லிப்பழை, கரவெட்டி
பி. ப. 4 மணி மட்டும்
Elizabeth Taylor
Richard Burton
in
THE SANDPIPER
(M. G. M's) (Color-scope)
(Adults)

REGAL—JAFFNA
NOW SOWING
DON NEGOWAN &
SILVANA PAMPANINI
in
Guns of the Black
Witch


"சாதிக்கொடுமை ஒழிய

## உயர்வகுப்பினரும் ஒத்துழைக்கவேண்டும்

உடுப்பிட்டி, சனி
"ஏழைமக்களிடம் ஊழைத்தைச் சுரண்டி வாழ்பவர்கள் தான் இச்சாதி முறையை அனுஷ்டிக்கிருர்கள். தீண்டாமை மக்களின் சமூக, பொருளாதார ஒற்றுமைக்கு பெரும் தடையாகவுள்ளது. இச்சாதி முறையை அகற்ற முற்போக்கு எண்ணம் கொண்ட உயர் வகுப்பினரும் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும்."

கரவெட்டி கிழக்கு தேனிப்புளியடி மைதானத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் (சீன) கட்சியின் வடமராட்சிக் கிளை நடத்திய தீண்டாமை ஒழிப்புக் கூட்டத்தில் பேசுகையில் திரு நீர்வை பொன்னையன் மேற்கண்டவாறு கூறினுர். இக்கூட்டத்திற்கு திரு. பி. தம்பிமுத்து தலைமை வகித்தார்.

திருவாளர்கள் எம். கே. அந்தனிசில், எஸ். கணேசன் கே. டானியல், செந்தில்நாதன், கதிர்காமு, சின்னத்தம்பி உட்பட வேறு பலரும் பேசினர்.

## எச்சரித்து விடுதலை

மாவிட்டபுரம், செவ்.
"நீங்கள் இந்தச் சண்டையில் ஈடுபட்டதைப் பற்றி எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனல் இச்சம்பவத்தில் யார், யார் ஈடுபட்டார்கள் என்னமாதிரி இச்சம்பவம் நடைபெற்றது என்பதில் ஐயம் இருப்பதாலும் சாட்சியங்களில் முரண்பாடு யிருப்பதாலும் உங்களை விடுதலை செய்கிறேன் இனிமேலும் இப்படிச்செய்யலாம் என்று எண்ணுதீர்கள்."

சுளிபுரத்தைச் சேர்ந்த மூவர், இருவரைப் பொல்லால் தாக்கிக் காயமேற்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நித்சிங்கா மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் சுழிபுரத்தைச் சேர்ந்தவர்களான மாரிமுத்து தங்கவேலு, மாரிமுத்து வயிரமுத்து ஆகிய இருவரும் சென்ற மார்ச் மாதம் 30-ந்திகதி அதே இடத்தைச் சேர்ந்த சுப்பர் வேலாயுதத்தைப் பொல்லால் தாக்கிக் காயப்படுத்தியதாகவும், அதே நேரத்தில் முந்தர் நடராசா என்பவர் சின்னப்பொடியன்செல்லனை பொல்லால்தாக்கியதாகவும் சுன்னாகப் பொலிசாரால் குற்றஞ்சாட்டிப்பட்டிருந்தது.

## குருடர் நிகழ்த்தும் கலை நிகழ்ச்சி

கொத்மலை, சனி
அகில இலங்கை குருடர் சங்கத்தாரின் கலை நிகழ்ச்சியும், பொருட்காட்சியும் நாளை நாவலப்பிட்டி நகர சபைமண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

குருட்டு இளைஞர்களே நடிக்கும் நாடகங்கள், இசைக்கும் இசைநிகழ்ச்சிகள் நகைச்சுவை நிகழ்ச்சிகள். முதலியபல்வேறுசிறப்பு அம்சங்கள் இடம்பெறவிருக்கின்றன.

மேற்படி நிகழ்ச்சியை நாவலப்பிட்டி நகரசபைத் தலைவர் திரு வி. ஏ. டேவிட் பெரேரா ஆரம்பித்து வைப்பார்.

தயாற் தந்திப் பகுதி

## நாவலர் நினைவுதினப் பேச்சுப் போட்டி

வெள்ளவத்தை, சனி
தபாற் தந்திப் பகுதியினரின் சார்பில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நினைவுதினப் பேச்சுப்போட்டி கொழும்பு பிரதம தபாற்கந்தோர் நூல்நிலைய மண்டபத்தில் திரு. கே. பேரம்பலம் தலைமையில் நடைபெற்றது.

அநேகமான இறிந்தவ தமிழ் ஊழியர்களும் இப்பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டனர். திருவாளர்கள் ரி. பாலசுப்பிரமணியம் ரி. தேவதாசன், ஏ. தெய்வசிகாமணி ஆகியோர் பேச்சுப்போட்டியில் முறையே மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டனர்.

## நாவலர் நினைவு தினவிழா

வெள்ளவத்தை, சனி
சைவப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நினைவு தினத்தை அடுத்த மாதம் 4ந் தேதி தமிழ் அரசாங்க ஊழியர்கள் கொழும்பில் கொண்டாட இருக்கின்றனர்.

நாவலர் மண்டபத்தில் நடைபெற இருக்கும் இவ்வைபவத்தில் சகல தொழிற்காரியாலயங்களிலுமிருந்து பிரதிநிதிகள் பேச்சாளர்களாகக் கலந்துகொள்வர். இதற்கென 'நாவலர் சேவை' என்னும் பொருள் பற்றி அரசாங்க ஊழியரிடையே பேச்சுப்போட்டியும் நடைபெறும்.

## யாழ். இலக்கிய வட்ட ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ். இலக்கிய வட்டம் தனது முதலாவது ஆண்டு விழாவை அடுத்த மாதம் 15 ம் திகதி நடத்தவிருக்கிறது. இவ்விழாவையொட்டி மலரொன்று வெளியிடவும் திரு. ந. சி. கந்தையாபிள்ளை கன்ஞர் யாழ்ப்பாணன் ஆகியோரைக் கௌரவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## லிகிதாசங்க பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
அகில இலங்கை தற்காலிக லிகிதர் சங்கத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம்டிசம்பர் மாதம் 3-ந்திகதிகொழும்பில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு குடிசன மதிப்பு இலாகாவிலுள்ள சங்கத்தின் அலுவலகத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

## விற்பனையில் 'வேறுபாடு'

யாழ்ப்பாணம், ஞாயிறு
சின்ன வெங்காயத்தின் கட்டுப்பாட்டு விலை 28 சதமாக இருந்தும் சந்தையிலுள்ள சில வர்த்தகர்கள் 35 சதமாக விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. சில கடைகளில்வெங்காயம் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளில் 28 சதம் என விலை குறிக்கப்பட்டிருப்பதாகவும் ஆனல் கூடிய விலைக்கே இக்கடைகளில் வெங்காயம் விற்பனை செய்யப்படுவதாகவும் அறியப்படுகிறது.

திருநெல்வேலி, சனி
கட்டமரவெள்ளிக் கிழங்கைச்சாப்பிட்ட பின்னர் இஞ்சி கலந்த தேனீரையும் குடித்தஇளைஞர் ஒருவர் மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிமாணவரான இராசேந்திரம்16 வயதுஎன்றமாணவருக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது. இப்போது சிகிச்சைபெற்றுவருகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தாக்கினுல் நடவடிக்கை எடுக்கப்படும்

## இஸ்ரேலுக்கு ஐ.நா.வின் கடுமையான எச்சரிக்கை

ஐ. நா. (நியூயோர்க்) நவ. 26

ஜோர்டான் மீது இஸ்ரேல் அத்து மீறித் தாக்குதல் நடத்தியதற்கு ஐ. நா. பந்தோபஸ்து சபைகள் கண்டனம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் இதுபோன்று மேலும் தாக்குதல் நடத்தினுல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

சென்ற 14-ம் திகதி ஜோர்டான் கிராமங்களின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலை ஐ நா. பந்தோபஸ்து சபை வன்மையாகக் கண்டிக்க வேண்டுமென நைஜீரியா, மாலி ஆகிய நாடுகள் கேட்டிருந்தன.

இதற்கான பிரேரணையொன்றை நைஜீரியா கொண்டு வந்திருந்த போது சகல உறுப்புநாடுகளும் ஆதரித்து வாக்களித்தன. நியூசிலாந்து வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

## 'உதவியை விட வர்த்தக தொடர்பையே விரும்புகிறேம்'

### லண்டனில் பாக். ஜனதிபதி

லண்டன், நவ. 24

'பாகிஸ்தான் பிறநாடுகளிடமிருந்து உதவி பெறுவதை விட வர்த்தகத் தொடர்புகளை விருத்தி செய்து கொள்வதையே விரும்புகிறது' என்று பாகிஸ்தான் ஜனதிபதி ஜனுப் அயூப்கான் இங்கு தெரிவித்தார்.

லண்டன் மேயர் அளித்த வரவேற்பொன்றுக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே பாகிஸ்தான் ஜனதிபதி இவ்வாறு கூறினர்.

பிரிட்டிஷ் காமன்வெல்த் சபை உழைப்பில் பாகிஸ்தான் மக்களும் நம்பிக்கை கொண்டுள்ளார்களென்று இதனுல் தான் பாகிஸ்தான் முன்னேறிவர வாய்ப்பு இருக்கிறதென்றும் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் ஜனநாயக முறையை அவர் பெரிதும் பாராட்டினர். லண்டன் மேயரின் வரவேற்புப் பத்திரம் வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்டு ஜனதிபதி அயூப்புக்கு வழங்கப்பட்டது.

## சீனப் பத்திரிகையின் கண்டனம்

பீகிங், நவ. 26

பார்மோசாவுக்கும், சீனவுக்கும் ஐ நா வில் இடம் இருக்க வேண்டுமென கனடா ஐ. நா. வில் தெரிவித்துள்ள யோசனைக்கு சீனப் பத்திரிகையான 'பீப்பிள்ஸ் டெய்லி' கண்டனம் தெரிவித்துள்ளது.

இது பிரிவினைக்கான ஒரு யோசனையென்றும் அமெரிக்காவின் எண்ணத்தை நிறைவேற்றவே கனடா முயற்சிக்கிறதென்றும் பீப்பிள்ஸ் டெய்லி தனது ஆசிரியர் தலையங்கத்தில் கருத்து வெளியிட்டுள்ளது.

ஐ. நா. அமெரிக்காவின் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது என்றும் 'பீப்பிள்ஸ் டெய்லி கூறியுள்ளது.

## ரொடீஷிய பிரச்னை

லண்டன், நவ. 26

ரொடீஷிய பிரச்னை பற்றி கவர்னர் கிப்சுடன் பேச்சுவார்த்தை நடத்த பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி திரு. பௌடன் சாலிஸ்பரிக்கு சென்றுள்ளார்.

இதற்கிடையில், சட்ட விரோத ஆட்சி செலுத்தி வரும் திரு. அயன் ஸிமித் உடன் பாட்டுக்கு வருவார் என்பதில் தமக்கு அதிக நம்பிக்கையில்லையென பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் தெரிவித்துள்ளார்.

## ஆசிய அபிவிருத்தி வங்கி

### மூலதனம் அதிகரிப்பு

டோக்கியோ, நவ. 26

ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலதனம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற கவர்னர்களின் தொடக்க கூட்டத்தில் இது தெரிவிக்கப்பட்டது.

## இந்தோனேஷியாவில் மோதல் தவிர்க்கப்பட்டது

ஜாகர்த்தா, நவ. 26

இந்தோனேஷியாவிலிருந்து வெளியேறவிருக்கும் சீனர்கள் இருந்த முகாம்களில் இந்தோனேஷிய மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டபோது இருசாராருக்குமிடையில் கலகம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியதாகவும் இது உடன் நடவடிக்கையால் தடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, நவ. 26

ராஜாஜியின் பிறந்தினத்தை அடுத்தமாதம் 8-ம் திகதி விமரிசையான முறையில் கொண்டாட சுதந்திரா கட்சி, தி. மு. க. முஸ்லிம் லீக், தமிழரசுக்கழகம் ஆகிய கட்சிகள் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளன. பணமுடிப்பொன்றும் ராஜாஜிக்கு வழங்கப்பட இருக்கிறது.

## 'அணு ஆயுத சோதனைகளை முற்றுக தடுக்கவேண்டும்'

### ஐ.நா. அரசியல் கமிட்டி தீர்மானம்

ஐ. நா (நியூயோர்க்) நவ. 26

அணு ஆயுத சோதனைகள் முற்றாகத்தடை செய்யப்பட வேண்டுமென ஐ. நா பிரதான அரசியல்கமிட்டிகேட்டுக்கொண்டுள்ளது.

நிலத்தடிசோதனை செய்யப்படுவதை அதிர்வுகள் மூலம் அறிந்து கொண்டால் அதுபற்றி ஐ நாவில் தெரிவிக்கப்படவேண்டுமெனவும் கமிட்டி தெரிவித்தது.

## தாய்லாந்தின் எதிர்ப்பு

ஐ. நா. (நியூயோர்க்) நவ 26

ஐ. நா. வில் சீனவுக்கு இடமளிக்கப்படுவதை தாய்லாந்து ஆட்சேபித்துள்ளது. சீன மற்ற நாடுகளை நசுக்கும் எண்ணம் கொண்டுள்ளது என்றும் சுதந்திரத்துக்கு ஆபத்துவிளைவிக்கும் ஒரு நாட்டை ஐ நாவில் சேர்த்துக் கொள்வது உகந்த ஒரு காரியமல்ல எனவும் தாய்லாந்துகருத்துதெரிவித்துள்ளது.

## இந்தியாவுக்கு ரஷ்ய உதவி

புதுடில்லி, நவ. 26

நேற்று இங்கு இந்தியாவுக்கும் சோவியத் ரஷ்யாவுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தமொன்றின் கீழ், இந்தியாவில் 5 ராஜ்ய பிரதான விவசாயப் பண்ணைகள் அமைப்பதற்கென விவசாய இயந்திரக் கருவிகள், மற்றும் சாதனங்கள் இந்தியாவுக்கு அளிக்க ரஷ்யா முன்வந்துள்ளது. இவற்றின் விலைமதிப்பு 1 கோடி ரூபாயாகும்.

## இந்தியாவுக்கு கனடா உதவும்

ஒட்டாவா, நவ. 26

பாரதத்துக்கு உணவு விஷயத்தில் கனடா உதவும் என கனடாபிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் காமன்ஸ் சபையில் தெரிவித்தார். இந்தியப் பிரதமர் திருமதி இந்திராவின் தனிப்பட்ட வேண்டுதலின் பேரிலேயே கனடா உதவவிருப்பதாகவும் அவர் எடுத்துக் கூறினர்.

## 6000 அமெரிக்கர் கொல்லப்பட்டனர்

வாஷிங்டன், நவ. 26

வியட்நாமில் நடைபெற்று வரும்யுத்தத்தில் இதுவரை 6000 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர் என்றும் சுமார் 24000 அமெரிக்கர்கள் காயமடைந்தோர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அலஹபாத்

## உயர் நீதிமன்ற 100வது ஆண்டுவிழா

புதுடில்லி, நவ. 26

அலஹபாத் உயர் நீதி மன்றங்களின் 100 ஆண்டு விழா நேற்று நடைபெற்றது. இந்தவிழாவில் ஜனதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் மற்றும் மந்திரிகள் உட்பட பலபிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## ரஷ்யா செல்வார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை கம்யூனிஸ்ட் வாலிப முன்னணி உபதலைவரும், வடபிரதேச கம்யூனிஸ்ட் வாலிப முன்னணி செயலாளரும், முன்னுள் வட்டுக்கோட்டை கிராம சபை உறுப்பினருமான திரு. இ. நடராசா வாலிப முன்னணியின் விசேஷ அழைப்பின் பேரில் வரும் செவ்வாய்க்கிழமை ரஷ்யா செல்கிறார்.

## மேல்நாடுகளில் செயலாகாதது இங்கு எப்படி சாத்தியமாகும்?

### வெள்ளை அறிக்கை பற்றி உடுப்பிட்டி எம்.பி. விளக்கம்

சுன்னாகம், சனி

"வெள்ளை அறிக்கைமூலம் மேல் நாடுகளில் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு கல்வி கற்கும் மாணவர்களைத் தரம் பிரித்தார்கள். ஆனுல் அம்முறை நல்ல வகையில் செயல்படுத்த முடியாது போகவே, திரும்பவும் தரம் பிரிக்கும் முறையைமாற்றி அமைத்து விட்டார்கள். தற்சமயம் இலங்கையிலோ மேலைத்தேசங்களில் நடைமுறையில் செய்யமுடியாது புறக்கணிக்கப்பட்ட கொள்கையை அமுல் நடாத்தி மாணவர்களைத் தரம்பிரிக்க எத்தனிக்கின்றனர். தரம் பிரிப்பதாலுல் விஞ்ஞானம், பொறியியல், விவசாயம் போன்றவைகளைக் கற்பிக்கப்போதுமான கல்விச் சாலைகளோ அன்றி ஆசிரியர்களோ இங்கு இல்லை"

சித்தன்கேணி சமூக இயல் கழகத்தினரால் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடாத்தப்பட்ட மூன்றுவது ஆண்டு விழாவில் பேசும்போது உடுப்பிட்டி எம். பி. திரு. மு சிவசிதம்பரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு இயல்கழகத் தலைவர் செல்வன் ந. பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

மேலும் தொடர்ந்து திரு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

கல்வி மந்திரியினுல் தயாரித்திருக்கும் வெள்ளை அறிக்கையை தெரிந்திருக்கும் மாணவர்களாகிய நீங்கள் விபரமாக ஆராய்ந்து அதற்கேற்றவாறு உங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும். நல்லவழிவகைகளையும் கையாளவேண்டும். 1947-ம் ஆண்டுக்கு முன் தமிழ் பேசிய புத்தளம், நீர்கொழும்பு, சிலாபம் போன்ற இடங்களில் உள்ள தமிழ் மக்கள் தற்பொழுது சிங்களத்தையே கற்பதற்குத்தொடங்கியுள்ளார்களென்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனுல் தமிழ் இனம் அழிவுப்பாதை நோக்கிச் செல்கிறதென்றே தோன்றுகிறது.

வட்டுக்கோட்டை எம்.பி. கூறியதாவது:

தமிழ் மக்களுக்குத் தாய்மொழி போதனுமொழியாகவும் இரண்டாவது மொழி ஆங்கிலமும் என ஏற்றபின்பு சிங்களத்தைக் கற்பதற்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பும்படி குறுகிய மூளை உள்ளவர்கள் சிலர் கேட்கின்றார்கள், ஆங்கிலத்தைப் படிக்காது மேற்படிப்போ அன்றி வெளிநாடுகளுக்குச் செல்வதோ சாத்தியமாகுமா?

கல்லூரி அதிபர் திரு. செ. சிவகுருநாதபிள்ளை ஆசிரியர் திரு. மு. நீலகண்டசிவம், ஆசிரியர் திரு. மு. பத்மநாபன் உட்பட கழக மாணவ மாணவிகளும் பேசினர்கள்.

## தெல்லிப்பழை கொலை வழக்கில் மேலும் இருவர் விடுதலை

மாவிட்டபுரம், சனி

தெல்லிப்பழைக் கொலை வழக்கில் மேலும் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தெல்லிப்பழை கொலை வழக்குச்சம்பந்தமான தஸ்தாவேஜுக்களைப்பார்வையிட்ட அட்டோர்ணி ஜெனரல் இவர்கள் இருவருக்கும் எதிராகவுள்ள குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாது என்றும் அவர்களை விடுதலைசெய்யும்படியும் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி எஸ். நிற்சிங்காவுக்கு அறிவித்ததைத்தொடர்ந்தே இந்த இரண்டு எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கில் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்களான ஆண்டிமுதலி, நீலன் முருகன், ஆண்டிகதிரன், ஆண்டிசடையன், நாகன் முத்தன், ஆண்டி ஆறுன், ஆகிய ஆறுபேரும் சென்ற ஏப்ரல்மாதம் ஏழாம் திகதி சட்டவிரோதமாகப் பயங்கர ஆயுதங்களுடன் கூட்டம் கூடியதாகவும், கலகம் விளைவித்ததாகவும், பலாத்காரம் பாவித்ததாகவும் தெல்லிப்பழையைச்சேர்ந்த முதலி-சின்னவனைக் கொலைசெய்ததாகவும் சுன்னுகம் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது. இவ்வழக்கை முன்னர் விசாரித்த மாஜிஸ்திரேட் திரு. ஜி. எவ். எச். அந்தருபாணுஐந்தாம் ஆறும் எதிரிகளான நாகன் முத்தன் ஆண்டி ஆறுன் ஆகிய இருவரையும் விடுதலை செய்து முதல்நாலு எதிரிகளையும் சுப்ரீம்கோர்ட்விசாரணைக்கு திற்கும்படி உத்தரவிட்டு வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தி நாலு எதிரிகளையும் ரிமாண்டில் வைத்திருந்தார். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. வி. என். நவரத்தினம் ஆஜராகியிருந்தார் சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வேர்னி விஜயசூரியாவின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. வி. செல்லத்துரை வழக்கைநடத்தினர்.

இவ்வழக்குசுப்ரீம்கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வழக்குத் தஸ்தாவேஜுக்களைப் பார்வையிட்டஅட்டோர்ணி ஜெனரல் மூன்றும், நாலாம் எதிரிகளுக்கு எதிராகச்சாட்சியங்கள் இல்லாமையைக் கண்டுபிடித்துஅவர்களை விடுதலைசெய்யும்படி மல்லாகம் மாஜிஸ்திரேட்டுக்குஅறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்துமாஜிஸ்திரேட்திரு. டி. எஸ் நிற்சிங்கா ரிமாண்டிலிருந்த 3ம் 4ம் எதிரிகளை விடுதலை செய்துள்ளார், இனி சுப்ரீம்கோர்ட்டில் 1ம் 2ம் எதிரிகளுக்கும் எதிராக வழக்கு நடக்கவிருக்கிறது.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

வெள்ளவத்தை, சனி

தெல்லியடி அமெரிக்கன் மத்திய மகாவித்தியாலயத்தின் கொழும்புவாழ் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம், வெள்ளவத்தையில் திரு. குமாரசாமி நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. உமாபதி கயிலாயநாதன், உப-தலைவர்: திரு. நா. இராசேந்திரன், செயலாளர்: திரு. சி. குணேந்திரராசா, பொருளாளர்: திரு. இ. செல்லலிங்கம், போஷகர்: திரு. கு. நவரத்தினம். இவர் கொண்ட நிர்வாகசபைக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சுயநலம் நமக்கு அதிகரிக்க அதிகரிக்க நாம் அதிக பாவத்துக்கு உள்ளாகிறோம். தெய்வத்திடமிருந்து பிரிவது பாவம். தெய்வத்தோடு லயப்பட்டு இருப்பது புண்ணியமாகும்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Postlisen ...
Telegrams: EELANADU Jaffna. Telephone 280

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு கார்த்திகை 12 (27-11-66)


## நிரந்தரத் தீர்வு வேண்டும்

மந்திரிப் பதவியைத் துறக்க செனட்டர் மு. திருச்செல்வம் முன்வந்தாராயினும் அவர் 'இப்போதைக்கு' பதவியிலிருந்து விலகமாட்டார். இதன் மூலம் தேசிய அரசாங்கத்தில் ஏற்படவிருந்த நெருக்கடியும் 'இப்போதைக்கு' சமாளிக்கப்பட்டுவிட்டது. தேசியஐக்கியத்தை நோக்கமாகக்கொண்டு உருவாக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தில் நெருக்கடியோ, சிக்கலோ ஏற்படாமல் தடுக்கப்பட்டது மகிழ்ச்சியளிப்பதாகும்.

அரசாங்கக் கட்சிக் கூட்டம் நடைபெற்றுமுடிந்த பின் வெளியில் பல வதந்திகள் அடிபட்டதும் திரு. திருச்செல்வம் தமது மந்திரிப்பதவியை ராஜினாமா செய்ய முன்வந்ததும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் ஆலோசனை நடத்தியதும் பின்னர் தமிழரசுக் கட்சித் தலைவர் பிரதமரைச் சந்தித்துப் பேசியதும் இரண்டு தினங்களுக்குள் நடைபெற்றுமுடிந்த சம்பவங்கள். இவை பற்றி உத்தியோகபூர்வமான அறிவிப்புகளோ, தகவல்களோ வெளிவரவில்லை என்பதும் உண்மையே. ஆயினும் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முக்கிய கட்சியான ஒரு கட்சியின் கொள்கை சம்பந்தமாக தேசிய அரசாங்கம் ஆட்சிக்குவந்து சுமார் இருபது மாதங்களின் பின் சிறு சலசலப்பு ஏற்பட்டதும், பாரிமெண்ட் வட்டாரங்களில் பலத்த வதந்தியை ஏற்படுத்தியதும் உண்மையே. 'இப்போதைக்கு' நிலைமை சமாளிக்கப்பட்டுவிட்டது தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி தொடர்ந்து இருந்துவரும் இது நல்ல செய்தி மகிழ்ச்சி தரும் செய்தி. ஆனால் 'திருதியகண்டம் பூரண ஆயுசு' என்ற நிலையில் தான் தமிழர் இங்கு வாழவேண்டுமா? ஆட்சிக்கு வரும் ஓர் அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நம்பி ஒத்துழைப்பு அளிப்பதும் பின்னர் அது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதும், ஒத்துழைப்பை வாபஸ் பெறுவதும் மீண்டும் ஒரு கட்சியுடன் உடன்பாடு செய்துகொண்டு ஒத்துழைப்பு அளிப்பதும், மீண்டும் ஒத்துழைப்பை வாபஸ்பெறுவதும்..,

இதே நிலை நீடித்தால் தமிழ் சமுதாயம் மட்டுமல்ல இந்த நாடுதான் முன்னேற முடியுமா? ஒரு கட்சியையோ ஆட்சிக்கு வரும் ஓர் அரசாங்கத்தையோ எப்போதும் நம்பியிருக்க முடியுமா? மொழிப் பிரச்னை மற்றும் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகள் சம்பந்தமான பிரச்னைகளுக்கு நிரந்தரமான தீர்வு காணப்படாதவரை இந்த நிலை நீடிக்கத்தான் செய்யும். நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இப்பிரச்னைகளைத் தேசியப் பிரச்னைகளாகக் கருதவேண்டும். தேசியரீதியில் அவற்றுக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும். இவைகளைத் தேர்தல் பிரச்னைகளாகக் கருதுவதைக் கைவிட வேண்டும். இதற்குப் பெரும்பான்மை - சிறுபான்மை என்ற வேற்றுமையைவிடுத்து இலங்கையர் என்ற நிலையில் அனைவரும் முயற்சி செய்யவேண்டும். அரசியல் வாதிகள் மட்டுமல்ல நாட்டின் நலனில் அக்கறைகொண்ட அனைவரும் முன்வரவேண்டும். அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யவேண்டும் என்றும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டுமென்றும் முயற்சி செய்யப்படும் இச்சமயத்தில் தேசியப் பிரச்னைகளுக்குத் தேசியரீதியில் 'நிரந்தர' தீர்வுகாண்பதற்கு அரசியல் நிர்ணயசபையைக்கூட்ட முயற்சி செய்வது உபயோகமாக இருக்கும்.

## அரிசி ஒப்பந்தம்

இலங்கைக்கு, பர்மா, அரிசி விற்கமுன்வரும் விலைப்படி அடுத்த ஆண்டுக்கான அரிசியை விற்பதற்கு சீனா ஒப்புக்கொண்டிருக்கிறது. இதனால் அரிசிக்கு சிறிது பணம் அதிகமாக இலங்கை கொடுக்க வேண்டி ஏற்பட்டாலும் அதை 'சரிக்கட்ட' இலங்கையிடமிருந்து வாங்கும் ரப்பருக்கு 'ஷீட்' ஒன்றுக்கு இப்போதைய விலையைவிட இரண்டு சதம் கூடுதலாகக்கொடுக்க சீனா ஒப்புக் கொண்டிருக்கிறது. இலங்கை-சீன, ரப்பர்-அரிசி ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் நல்லபடியாக முடிந்து, அடுத்த ஆண்டிலும் நமக்கு அரிசி தரவும் நமது ரப்பரை வாங்கவும் சீனா ஒப்புக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது; மகிழ்ச்சி தருவது.

பர்மாவிடமிருந்து மூன்று லட்சம் தொன் அரிசி வாங்குவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு நமது உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா, இப்போது ரங்கூன் போய்ச்சேர்ந்திருக்கிறார். பர்மா நமக்கு என்ன விலையில் அரிசி விற்பதற்கு ஒப்புக் கொள்கிறதோ அந்த விலைக்குத்தான் சீனாவும் நமக்கு அரிசி விற்கும். பர்மாவுடனான பேச்சுவார்த்தைகளின் முடிவு தெரிந்த பின்னரே சீனாவுடனான வர்த்தக ஒப்பந்தத்தின் இலாப-நஷ்டம் தெரியும். எப்படியும் நமக்கு அரிசி தேவை. பர்மாவும் 'நியாயமான' விலையில் நமக்கு அரிசி தர ஒப்புக் கொள்ளுமென்றும், நமது அமைச்சர் வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொள்ளுவாரென்றும் எதிர்பார்ப்போம்.

அரிசிக்காக இப்படி எத்தனை காலத்துக்குத்தான் பிற நாடுகளை எதிர்பார்த்து ஏங்கி நிற்பது? எத்தனை காலத்துக்குத்தான் ...

னக்காவடி எடுப்பது? மொழிக்காகச் சிறையும் செல்வோம்; நாட்டுக்காக உயிரையும் விடுவோம் என்று 'சூள்' உரைக்கும் இந்நாட்டுத் தலைவர்கள், நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய ஏன் முன்வரக் கூடாது? பொருளாதார நிலை மிகமோசமாகச் சீர்குலைந்துள்ளது. இனியும் உணவுக்காக பிறரை எதிர்பார்த்திருந்தால் பசியும் பட்டினியும்தான் மிஞ்சும். இதர பிரச்னைகள் எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு 'யுத்தகால' அடிப்படையில் உணவு உற்பத்திக்கு உரிய காலத்திட்டங்களைத் தயாரித்து செயலாக்க முன்வர வேண்டியது அவசியம்.

### பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இந்து ஆலயம் உருவாகிறது

# கலைக்கூடங்கள் மத்தியில் இறைவனுக்கு ஓர் ஆலயம்

—அறிஞர் கி. வா. ஜகந்நாதன்—

பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இந்து மாணவர் சங்கத்தின் முயற்சியினால் இந்து ஆலயம் ஒன்றை அமைப்பதற்கு இன்று அத்திபாரக்கல் நாட்டும் வைபவம் நடைபெறுகிறது. சமீபத்தில் இலங்கைக்கு விஜயஞ்செய்திருந்த அறிஞர் கி. வா. ஜகந்நாதன் பேராதனையில் நிகழ்த்திய சொற்பொழிவில் பல்கலைக் கழகத்தில் இந்து ஆலயம் நிறுவும் முயற்சி பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அவரது சொற்பொழிவின் சுருக்கம் இங்கே வெளியிடப்படுகிறது.

மிகமிகக் குளிர்ந்த இடம் மலைநாடு. அந்த மலைநாட்டில் கலைவாழும் இல்லமாக இப்பகுதி விளங்குகிறது. பல்கலைக்கழகத்தின் சிறந்த மாளிகைகளும், கலைக்கூடங்களும் இருக்கின்ற இந்த விரிவான இடத்தில் இறைவனது திருவருள் பரவுவதற்கு ஓர் ஆலயம் கட்டப் போகிறார்கள். ஒரு ஆன்மா லயம் பெறுவதற்கு உரிய இடமெதுவோ அதுதான் ஆலயம். மண்ணிலே உள்ள புழுதியிலே படிந்து பிரபஞ்சச் சேர்க்கையில் ஆழ்ந்து மலங்களை வாரிக்கட்டிக் கொண்டு ஆன்மாக்கள் திண்டாடுகின்றன. அந்தச் சேற்றினின்றும் வெளியே அது மெல்லமெல்ல, மேலே ஏறிசமதளத்திற்குவந்து படியேறி மலை மேலே ஏற வேண்டும். எவன் மிக உயரத்திலிருக்கிறானோ அவனுக்குத்தான் மிக விரிவான பார்வையிருக்கும். தன்னைக் காட்டிலும் உயர்வில்லாத பரம்பொருளாக இருக்கிறான் ஆண்டவன். அந்த ஆண்டவன் மிக மிக உயரத்தில் இருக்கிறான் என்பதைக் காட்டும்பொருட்டே முருகப்பெருமானை மலை மீது வைத்து, குறிஞ்சிக்கு நாயகனாய்க் கும்பிடுகிறார்கள் தமிழர்கள். மலையின் படிமேல் ஏறஏற மனிதனுக்குத் தன்னுடைய உள்ளத்தில் கவலைகள் ஓய்கின்றன. இமாசலமலையில் வாழ்கின்ற முனிபுங்கவர்கள் எல்லாம் மனதில் உள்ள கவலைப் பாரங்கள் குறைந்து உபசாந்திநிலையில் அமர்ந்திருக்கிறார்கள். அங்கே உள்ள குரங்குகள் அவர்களுக்கு ஏவல்செய்கின்றன. யானை வேட்கும் கனிர் தருகிறதின் வேட்கும் முனிவரென்றும் குரங்கு மந்திரிக்கும் என்றும் புறநானூற்றுப்பாடல்களில் வருகின்றன. மனிதனது கால் புழுதிபடாத மனிதனது மூச்சுக் காற்றுப் படாத தூய்மை நிறைந்த இடம் மலைமுகடு. அந்த முகட்டில் தங்கி நின்றால் மனித மனம் ஆடலின்றி அமைதிபெறும். அங்கே தான் நல்ல தியானம் கைகூடும். ஆகவே தான் மலைப் பகுதியில் முனிபுங்கவர்கள் எல்லாம் சென்று அமர்ந்திருக்கிறார்கள். அந்த முனிவருடைய உள்ளக்குகையில் எழுந்தருளியவன் முருகன். அதனால்தான் அவனுக்குக் குகன் என்ற பெயர் வந்தது. இதயத்தின் ஊடே இருக்கின்ற பகுதிக்கு தகராகாசம் என்று பெயர். அதைத்தான் உள் குகை என்று சொல்வார்கள். அந்தக் குகையில் தான் ஆன்மாவும் பரமான்மாவும் ஒன்று படவேண்டும். அந்தத் தத்துவத்தைத் தான் வள்ளியினுடைய திருக்கல்யாணம் கூறுகிறது. வள்ளியம்பெருமாட்டியை காதல் செய்த முருகவேள் அங்கே சென்று அவளிடத்துப் பலவகையான வேஷம் காட்டி கோலம் காட்டிப் பல வார்த்தைகளைப் பேசிக் கெஞ்சிக் கொஞ்சினார். இறுதியில் அப்பெருமாட்டியை திருத்தணிகைக் கோயிலில் சென்று அணைந்தார். அதன் பொருளென்ன? உலகத்தில் பலவகையான வேடம் புனைந்துவருகின்ற குருநாதர்களை ஆன்மாக்கள் முதலில் அறிவதில்லை. அந்தணனாய் வந்து தன்னுடைய திருவருளுக்கு ஆளாகும்படி உபதேசம் செய்யும்போது அவன் யாரோ என்று முதலில் நினைக்கிறோம். ''அருவராகி ஒருவன் அவனே இவன் குருபரனாகிய கொள்கையைச் சிறுமையென்று இகழாதே'' என்று மாணிக்கவாசகர் சொல்லுவார். எனவே வேடம் புனைந்துவந்த மனிதர் என்று நினைக்காமல் உண்மையான தெய்வமே குருவாக வந்தாரென்று எண்ணவேண்டும். அப்படி எண்ணாத வள்ளியம்பெருமாட்டிக்கு எம்பெருமான் பலபல சோதனைகளை நிகழ்த்தினார். அவற்றினின்றும் வென்று முருகன் ஒருவனையே நெஞ்சத்தில் கடைப்பிடிக்கும் பேரார்வம் உடையவளாய் இருந்தமையால் ஆண்டவன் கடைசியில் அவளுக்குத் தன் திருக்கோலத்தைக் காட்டினான். காட்டி திருத்தணிகை என்னுமிடத்தில் சென்று அங்குள்ள குகையில் அவளை மணம் புணர்ந்தான். இது கந்தபுராணத்தில் வரும் செய்தி. மலையிலுள்ள குகை தான் தகராகாசம். தகராகாசத்தை நினைப்பூட்டுகின்ற குகையில் ஆத்மபரமாத்ம ஐக்கியம் ஏற்பட்டது. திருத்தணிகை என்ற சொல்லுக்கு தணிந்திருத்தல் என்பது பொருள். புலன்களெல்லாம் அடங்கி நிற்க கருவி கரணங்களெல்லாம் ஒடுங்கி நிற்க மனம் என்பதே இல்லாமல் அடியோடு அழிந்து நிற்க அந்த நிலையில் எலாமற்ற கருவிகரணங்கள் ஒப்பதநிலை

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

இப்போது புதுச்சேரியிலே உண்ணாவிரதமிருக்கும் பூரி சங்கராச்சாரிய சுவாமிகளை சுமார் 35 வருடங்களுக்கு முன்பாக சென்னையில் தரிசித்தேன். ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது. ஆங்கிலத்திலே மிக நன்றாகப் பேசும் அவரை சென்னை கிறிஸ்தவ வாலிப சங்கத்தார் பேச அழைத்தனர். அவரும் துணிச்சலுடன் பேச ஒப்புக்கொண்டுவிட்டார்.

சென்னை சைனாபஜாரில் உள்ள அந்தப் பெரிய வை. எம்.ஸி.ஏ. கட்டிடத்திலே, அவர் பேச்சைக் கேட்க ஏராளமான கூட்டம். சுவாமிகள் வந்ததும் எல்லாரும் எழுந்துநின்று வரவேற்றனர். ''நமப்பார்வதி பதயே!'' என்று ஒருவர் கூற, ''ஹர ஹரமகாதேவா'' என்றுபலரும் சேர்ந்து கோஷித்தனர்.

சங்கக் காரியதரிசி சுவாமிகளை வரவேற்றுப்பேசுகையில், இந்து குருபீடாதிபதி ஒருவர், கிறிஸ்தவ ஸ்தாபனத்துக்கு வந்துபேச இசைந்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாயும், காலம் எப்படி மாறிவருகிறதென்பதற்கு இது நல்லதோர் அறிகுறி'' என்றும் சொன்னார்.

சுவாமிகள் உட்கார்ந்தபடியே பேசினார். காரியதரிசி கூறியதற்கு அவர் என்ன பதில் கூறப்போகிறாரோ என்று பலரும் மிக ஆவலுடன் இருந்தனர். சுவாமி என்ன சொன்னார் தெரியுமா?

''சென்னையிலே ஒரு பிரபல கிறிஸ்தவ ஸ்தாபனத்திலே ''ஹர ஹர'' கோஷங்கள் எழுந்ததை இப்போது கேட்டோம். இதிலிருந்து காலப்போக்கு எப்படி இருக்கிறதென்பதை உணரலாகும்'' என்று அவர் சொன்னதும் கூட்டத்தில் பலத்த கரகோஷம் எழுந்தது.

ஃ ஃ ஃ

ஸ்ரீசங்கராச்சாரியர் பீடங்கள் இந்தியாவில் பலவுண்டு. ஆதி சங்கரர் கேரளத்தைச் சேர்ந்த காலடியில் அவதரித்தவர். அப்போது சமணசமயம் நாடெங்கும் பரவிவந்தது. அவர் சிறு வயதிலேயே சகல சாஸ்திரங்களையும் கற்று, இந்து மன்னர்களும் மக்களும் மதம் மாறிவந்ததும், இந்து தர்மத்தை நிலைநாட்ட, சமணர்களுடன் தர்க்கம் செய்து வென்று வடக்கே காஷ்மீர் முதல் தெற்கே காஞ்சிபுரம்வரை பல மடங்களை ஏற்படுத்தினார்கள். காஞ்சிபுரத்திலிருப்பது காமகோடிபீடம். மைசூரைச் சேர்ந்த சிருங்கேரியில் இருப்பது சாரதாபீடம். வடக்கே பூரியில் இருப்பது கோவர்த்தனபீடம். இப்படி இன்னும் பலபீடங்களை ஏற்படுத்தி, இந்து தர்மத்தை நிலைநாட்டினார், ''கோவர்த்தனம்'' என்றால் 'பசுவளர்த்தல்' என்று பொருள். மற்ற பீடாதிபதிகள் யாரும் இவ்விஷயமாக உண்ணாவிரதமிருக்கவில்லை. கோவர்த்தன பீடாதிபர் மட்டுமே, அப்பெயருக்கேற்ப, முன்வந்திருக்கிறார் போலும்.

ஃ ஃ ஃ

சாகும்வரை அவர் உண்ணாவிரதமிருக்கவில்லை என்று 12 நாட்கள் மட்டுமே உண்ணாவிரதமிருக்கப்போவ

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் பட்டினசபை 1967 பட்ஜட் நிறைவேறியது

உடுவில், சனி

சுன்னாகம் பட்டினசபையின் 1967-ம் ஆண்டுக்குரிய வரவுசெலவுத்திட்டம் நேற்றுக்காலை பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தலைமையின்கீழ் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேறியது.

1967-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தினைப் பட்டினசபைத் தலைவர் தமிழ் மொழியில்தயாரித்து சபையில்சமர்ப்பித்திருந்தார். இந்த வரவு செலவுத் திட்டத்தில், பட்டினசபையால் நடத்தப்பட்டுவரும் பொதுசன நூல்நிலையத்திற்கு வேண்டிய புத்தகங்களையும் தளபாடங்களையும் கொள்வனவு செய்யும் பொருட்டு ரூபா 5000ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஒதுக்க நிதிகுறித்து எழுப்பப்பட்ட விவாதம் காரசாரமாகவிருந்தது. இறுதியாக இப்பிரேரணை சபையில் தோல்வியடைந்தது.

சுன்னாகம்சந்தையிலுள்ள வாழைக்குலைச் சந்தையை, சென்றகூட்ட அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறுமுன்னர் புதிதாகச் செப்பனிடப்பட்ட தெருபகுதி வெளியிடத்திற்கு தலைவரால் மாற்றப்பட்டது குறித்தும் எதிர்ப்பு பிரேரணைகொண்டுவரப்பட்டு தோல்வியடைந்தது.

இவ்வரவுசெலவுத்திட்டத்தின்படி இவ்வாண்டிற்கான உத்தேச வருமானம் ரூபா 3,88,000 ரூபாயாகவும், செலவு 3,77,000 ரூபாவாகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில்தமிழ்மொழியில் தனது வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து வெளியிட்ட இரண்டாவது பட்டினசபை சுன்னாகம் பட்டினசபையாகும். அண்மையில் சங்கானைப்பட்டினசபை முதன்முதலில் தமிழில்வரவு செலவுத் திட்டம் தயாரித்து வெளியிட்டிருந்தது.

# பொய்யான தகவல் கொடுத்து இறப்புப் பத்திரம் பெற்றனராம்

திருநெல்வேலி, சனி

மரணமான ஒருவர் பற்றிப் பொய்யான தகவலைக் கொடுத்து, சட்டவிரோதமான இறப்புப்பத்திரத்தை பதிவுசெய்ததாக இருவர் மீது யாழ்ப்பாணம் பொலிசாரால் தாக்கல்செய்யப்பட்டவழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு.ரி. ஜெ. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

தெல்லிப்பழை வாசியான தட்சணாமூர்த்தி அல்லது கந்தமூர்த்தி என அழைக்கப்படுபவரும், முருகேசு சண்முகம் என்பவரும் 1964ம் ஆண்டு ஆனிமாதம் 26ம் திகதி காலஞ்சென்ற நல்லதம்பி பரம்சோதி என்பவர் 1964ம் ஆண்டு மார்கழி மாதம் 22ம்திகதி காலஞ் சென்றதாக தெல்லிப்பழை இறப்புப் பதிவுகாரரிடம் பொய்யான தகவலைக்கொடுத்து அதன்படி இறப்புப்பத்திரத்தைபெற்றதாக இவ்வழக்கில் யாழ்ப்பாணம் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

மேல்விசாரணை இம்மாதம் 30ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 'சத்தியாக்கிரகம் மாக்ஸீயதத்துவமா?

புன்னாலைக்கட்டுவன், சனி

"புரட்சிமூலம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியுமென்ற மாக்ஸீய தத்துவத்தில் நம்பிக்கை பூண்ட சில அரசியல் தலைவர்கள் சிறுபான்மைத் தமிழர்கள் விடயத்தில் மட்டும் சாத்வீக சத்தியாக்கிரக வழியை மேற்கொண்டுள்ளமை கண்டு மாக்ஸ், ஏஞ்ஜல்ஸ், லெனின்போன்ற மாமேதைகள், தங்கள் கல்லறைகளிற் புழுங்கிப் புரழுவர். ஆலயம்சென்று வழிபடுவதில் நம்பிக்கையற்றோர், பிறரை ஆலயத்துக்குச் செல்லத் தூண்டுவது வேடிக்கையானது"

இவ்வாறு உரும்பராய் இந்து மாணவர் மன்றத்தில் உரையாற்றிய சைவப் புலவர் திரு. இ. நவரத்தினக்குருக்கள் கூறினார். ஆசிரியர் திரு. சி. டி. நவரத்தினம் தலைமை தாங்கினார்.

## கூடிப் படிக்க வசதி

பண்டத்தரிப்பு, சனி

மாணவர்கள் இரவுநேரத்தில் ஒன்றுகூடிப் படிப்பதற்கு இங்கு வசதிகள் செய்யப்பட்டு வருகிறது. இளவாலை சென். யேம்ஸ் வாலிபர்கழகம் இந்த முறையினை மேற்கொண்டுள்ளது.

கட்டளைக் குரவர் வண. பொயிக்கல் பாதுகாவலில் குருமனையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேற்படி கழகத்தினரே மாணவருக்கு கல்விபோதிப்பதில் உதவி புரிந்து வருகின்றனர்.

## இருவர் கைது
### நாவாந்துறைசம்பவ எதிரொலி

திருநெல்வேலி, சனி

நாவாந்துறையைச் சேர்ந்த நிலவீரசிங்கம் என்பவரையும், அவரது மனைவியான தங்கச்சியம்மா என்பவரையும் வாளால்வெட்டிப் படுகாயப் படுத்திய ...ன்ற சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணம்பொலிசாரால் தேடப்பட்டுவந்த இராஜேந்திரம், கனகரத்தினம் ஆகிய இருவரும் நேற்றையதினம் கைதுசெய்யப்பட்டார்கள்.

## அமெரிக்காவிலிருந்து திரும்பினர்

உடுப்பிட்டி, சனி

சர்வதேச இளம்விவசாயிகள் மாற்றுத் திட்டத்தின் கீழ்இலங்கை-அமெரிக்க ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அமெரிக்க அரசாங்கத்தின் உபகாரச்சம்பளத்தில் பயிற்சி பெறுவதற்காக இலங்கையிலிருந்து அமெரிக்கா சென்ற கரவெட்டியைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி சிறீஸ்கந்தராசாவும், குளியாப்பிட்டியாவைச் சேர்ந்த செல்வி சந்திரா ஹேரத்தும் தமது பயிற்சியைமுடித்துக்கொண்டு இலங்கை திரும்பியுள்ளனர்.

## நெல்லியடிக்கு மக்கள் வங்கி அவசியம்

உடுப்பிட்டி, சனி

"இப்பகுதியிலுள்ள ஏழை மக்களும், விவசாயிகளும் தங்களுக்குத் தேவையான கடனைப்பெற நெல்லியடியில் மக்கள் வங்கிக் கிளையொன்று திறக்கப்படவேண்டும்" என்று நெல்லியடி வர்த்தகர் சங்கப்பிரதிநிதிகள் குழுக் கூட்டமொன்றில் தலைவர் திரு. கே. ஞானசுப்பிரமணியம் பேசுகையில் கூறினார்.

## க..க்கூடங்கள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மிக் இறைவனோடு ஒன்றுகின்ற உயிர், இன்பத்தைக் காண்கிறது. இதைத்தான் வள்ளிநாயகியோடு ஒன்றிய முருகப் பெருமான் நமக்குக் காட்டினான். குகையிலே இருக்கிற பெருமானுக்கு குகைகள் நிறைந்த மலையிலே ஆசை அதிகம். மலை மிக உயர்ந்தது. அங்கேதான் பூமியிலுள்ள புழுதிகள் படாத இடங்கள் பல உண்டு. வானகத்திற்கும் மலை முகட்டிற்கும் மிக மிக நெருக்கம். இந்த நெருக்கத்திலே தான் மனம் ஒன்றுபட்டு இறைவனது திருவடிகளுக்கு ஆளாகிறது. உலகத்திலுள்ள எல்லாம்பகுதிகளைக்காட்டிலும் அழகு நிரம்பிய இடம் மலை. எப்பொழுதும் மழைபெய்து கொண்டு அருவிகள் சலசலத்துக்கேட்டுக் கொண்டிருக்கும் இடம் யாது? உலகமெல்லாம் வரண்டாலும் தான் வரளாதும்தான் துளங்காதும் நிற்பது மலை. அப்படி அசைவில்லாமல், வெப்பமில்லாமல் என்றும் குளிர்ந்த, என்றும் நிலைபெற்ற இடத்தில் நிலைபெற்றிருப்பவன் ஆண்டவன். அவனுக்குமலையே இயற்கையாக அமைந்த கோவில். அத்தகைய மலையாண்டியை மலைக்கடவுளை, குறிஞ்சிக் கிழவனை நம்முடைய மூதாதையரெல்லாம் தமிழ்நாட்டார் பிரதிட்டை செய்து வழிபட்டார்கள். முருகனுக்குக் கோயில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் குன்று தோறாடும் குமரனென்று போற்றினார்கள். ஒரு குன்றில் கோயில் இல்லாவிட்டாலும் அங்கே குமரன் இயற்கை எழில் நலம் திகழும் முகட்டில் உலாவுகிறான். பிறதெய்வங்களுக்குக்கோயிலிருந்தாலும் அக்கோயில்களினூடே முருகன் திகழ்கிறான். பிறர் ஒருவருக்குரிய வீட்டில் குடியிருப்பவரைப்போன்று முருகனுக்குரிய வீட்டில் அவர்கள் குடிவாழ்கிறார்கள் என்றுதான் கொள்ளவேண்டும். எனவே கலை நிரம்பிய இந்த இடத்தில் மலைமுகட்டின் மேல் ஒரு கோயில் எழவேண்டுமானால் இயற்கையாக முருகனுக்குத்தான் அமைந்த கோயிலாக இருக்கவேண்டும். இதை எண்ணி இங்குள்ள அன்பர்களெல்லாம் முருகனுக்குக்கோயில் கட்டநினைத்திருப்பது சாலப் பொருத்தமான காரியம். மலையின் மேலே முருகன் எழுந்தருளும்போது நெடுந்தூரத்தில் வரும் போதே அவன் கோபுர தரிசனம் கிடைக்கும். அவனை விட்டு விலகாமல் பார்வையினாலே ஒட்டிக் கொண்டிருக்கலாம். உயர்வான நிலையிலிருப்பவர்களது நிலை இதுதான். எவ்வளவுக்கெவ்வளவு அவர்களது பார்வை அகலமாயிருக்கும். முருகனுடைய திருஷ்டி கோகலமாகமிகப் பரந்த இடம் கிடைக்கும் அவனை மலையின் மேலே இருத்தினால் மலையின்மேலே இருக்கும் தன்மையினாலேயே அவனுடைய கண் பார்வை- அகன்ற பார்வை பல இடத்தில் செல்லும் பார்வை என்பதைக் காட்டுகிறது கோயிலின் கோபுரத்தில் இருந்தாலும்கூட சில வீதிகளைத்தான் பார்க்க முடியும். எவ்வளவு பெரிய கோபுரத்தைக் கட்டினாலும் குன்றைப்போலக் கட்டமுடியாது. குன்றின்மேல் கோயிலும் கோயிலுக்குமேல் கோபுரமும் இருந்தால் அந்தக் கும்பம் நெடுந்தூரத்திலேயே தெரியும். நெடுந்தூரத்திலே வரும் பொழுதே அந்த முருகப் பெருமானுடைய நினைவு தோற்றும்படி இங்கே எழப் போகும் கோயிலும் கோபுரமும் அமைந்தால் அந்தக் [illegible]

முருகத்தன்மை நிரம்பியிருக்கும் என்றும், இளையானும் என்றும் அழகியானுமாகிய ஆண்டவன் மலைமேலே நின்று கனியாகத் திகழ்கிறான். இதைத்தானே பழனி ஆண்டவனின் கதை காட்டுகின்றது.

(தொடரும்)

# மூவாயிரம் பிள்ளைகளை காணவில்லை

கொழும்பு, சனி

இதுவரை 3160 பிள்ளைகள் காணாமற்போய்விட்டதாக பொலிஸ் நிலையங்களில் புகார் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அறிவித்துள்ளார்.

காணாமற்போனதாகத் தெரிவிக்கப்பட்ட பிள்ளைகளில் 523 பிள்ளைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட கோஷ்டி பிள்ளைகளைக் கடத்துவதில் ஈடுபட்டுள்ளதாகவும் இக்கோஷ்டியினர் பிள்ளைகளைக் கொண்டு சென்று விற்பனை செய்வதாகவும் சந்தேகிக்கப்படுகிறது. சமீபத்தில் இருசிறுவர்கள் கடத்திச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டது சம்பந்தமாக விசாரணைசெய்யுமாறு உள்நாட்டமைச்சர் பொலிஸாரிடம் அறிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஐயாறன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் 13-ம் நாள் அவர் 'பாரணை' செய்து விரதத்தைப் பூர்த்திசெய்வாரென்றும் ராஜ்ய சபையிலே ஒரு மெம்பர் தெரிவித்தார்.

ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளைக் கைது செய்ததை ஆட்சேபித்து முதுபெரும் தலைவரான எம். எஸ். ஆனே தாமும் உண்ணாவிரதத்தை உடன் ஆரம்பிக்கப் போவதாக ஆத்திரத்துடன் பார்லிமெண்டில் பேசினார் அவர் பல வருடங்களுக்கு முன் இலங்கையிலே இந்தியாவின் பிரதிநிதியாக இருந்து பெரிதும் மதிக்கப்பட்டவரென்பது குறிப்பிடத்தக்கது.

சபையிலே தலைவர் உள்ளிட்டு பலரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆனே சாந்தமடைந்து அடுத்த ஏழு நாட்களில் அரசாங்கம் என்ன செய்யப்போகிறதென்பதைப் பார்த்து பின் நடவடிக்கை எடுப்பதாக ஒருவார அவகாசம் கொடுத்துள்ளார்.

மற்றும் ஒருவர் தம்மை பகிரங்கமாக எரித்துக் கொள்வதாக அறிவித்தார். ஆனால் அவரைக் கடைசிநேரத்தில் பொலிசார் கைதுசெய்தனர். இந்த கிளர்ச்சியிலே இன்னும் பலர் கைதுசெய்யப்பட்டதுடன் இக்கிளர்ச்சி தமிழ் நாட்டிலும் பரவிவருகிறது.

ஃ ஃ ஃ

புதுச்சேரியிலே அரசாங்க பங்களாவில் பூரிசுவாமிகளை வைத்து, பூசைக்கான எல்லா வசதிகளையும் அரசாங்கம்செய்து கொடுத்துள்ளதாயும் பல உயர் அதிகாரிகளும் சுவாமிகளைக் கண்டு அவரது அன்றாட தேவைகளை அறிந்து கூடிய வசதிகளை அளிப்பதாயும் சென்னைப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

சுவாமிகள் உண்ணாவிரதம் ஆரம்பித்து இன்றுடன் 6 நாட்களாகின்றன. பூசை, கங்காதீர்த்தம் எல்லாம் விமானத்திலேயே அவருடன் கொண்டுவரப்பட்டன நாலாம் நாள் 5 மணி நேரம் பூசை செய்தாராம். கங்காதீர்த்தம் மட்டுமே சாப்பிட்டார்.

"அரசாங்கத்துக்கு எவ்வித சங்கடமும் ஏற்படுத்த சங்கராச்சாரியார் விரும்பவில்லை" என்றும் "பசுவுக்கு சட்டபூர்வமான பாதுகாப்பளிப்பதற்காக தாம் அகிம்சா முறையிலே தியாகம் செய்யவேண்டும்" என்பதே அவரது நோக்கமென்றும், சென்னையிலிருந்து புதுச்சேரிக்கு வந்துள்ள அவரது சீடர் தெரிவித்துள்ளார்.

சுவாமிகளின் உண்ணாவிரதத்தால் இந்திய அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள தர்ம சங்கடம் கொஞ்சமன்று. இதை உணர்ந்து இவ்விரதத்தைக் கைவிட்டுவிடவேண்டுமென்று 'ஹிந்து' பத்திரிகை தலையங்கம் எழுதியுள்ளது.

இது எப்படியாயினும் இந்த உண்ணாவிரதத்தின் பயனாக பசுக்களைப்பாதுகாக்கவேண்டிய அவசியத்தை இங்கும் மக்கள் உணர்ந்து காரியம் செய்தால்.

## தீண்டாமை ஒழிப்பு பிரசார கூட்டம்

பருத்தித்துறை, சனி

தீண்டாமை ஒழிப்புப் பிரசாரக் கூட்டம் இலங்கை கம்யூனிஸ்ட் (சீனு) கட்சியின் ஆதரவில் புலோலி கிழக்கு அரசினர் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் திரு. எஸ். முத்தையா தலைமையில் நடைபெற்றது.

திரு. வி. ஏ. கந்தசாமி திரு. எஸ். இராசையா உட்பட வேறுபலரும் பேசினர்.

## திட்டம் மதிப்பீடு பற்றி பயிற்சி

கொழும்பு, சனி

திட்டஉருவாக்கம், மதிப்பீடு சம்பந்தமான தேசிய வேலைத்திட்டப்பயிற்சி அடுத்தமாதம் 5ந் திகதியிலிருந்து 24ம்திகதிவரை 30இளைஞர்களுக்கு இங்கு அளிக்கப்படவிருக்கிறது.

திட்டபொருளாதார விவகாரஅமைச்சு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அமெரிக்கா, பாரதம், போலந்து ஆகியநாடுகள் இப்பயிற்சிக்கு உதவமுன் வந்துள்ளன. இந்நாடுகளிலிருந்து விரிவுரையாளர்கள் இங்கு ...ரைக்க வருவர்.

## மேனனுக்கு இடம் கிடைக்குமா?

புதுடில்லி, நவ. 26

வடபம்பாய் தொகுதியில் காங்கிரஸ்சார்பில் போட்டியிடவிருக்கும் அபேட்சகரது பெயர்விபரம் வரும் வியாழக்கிழமை தெரிவிக்கப்படுமென்று காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜ் அறிவித்துள்ளார். அநேகமாக திரு. வி. கே. கிருஷ்ணமேனன் இத்தொகுதியில் போட்டியிடலாமெனத்தெரிகிறது.

---

நமது பால் பஞ்சம் தீரவும், பால் மாவுக்காக ஏங்கித் தவிக்காமலும் இருக்கலாம்; நாட்டுச் செல்வத்தை வெளியேற்றாமலும் பாதுகாக்கலாம்.

ஃ ஃ ஃ

மெய்யராகிப் பொய்யை நீக்கி வேதனையைத் துறந்து, செய்யரானார் சிந்தையானே தேவர் குலக்கொழுந்தே, தைவன் நாயேன் உன்றன் நாமம் நாளும் நவிற்றுகின்றேன், வையம் முன்னே வந்து நல்காய் வலி வலமேயவனே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'முதல் எதிரி அண்ணையை கத்தியால் வெட்டினார்'

## காயப்படுத்திய வழக்கில் இளம் பெண் சாட்சியம்

சாவகச்சேரி, சனி

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 24ந் திகதி 5-30 மணிக்கு வீட்டில் இருந்தேன். அப்போது எதிரிகள் கத்தி கொட்டன்களுடன் வந்தனர். முதல் எதிரி அண்ணைவிற்கு கத்தியால் வெட்டினார். தொடர்ந்து பலதடவை வெட்டினார். வெட்டு தலையில் பட்டது. நான் "ஐயோ அண்ணைவை வெட்டுகிறார்கள்" எனக் கதறினேன். அப்போது ஐயா ஓடி வந்தார். அப்போது இரண்டாம் எதிரி ஐயாவிற்கு கத்தியால் வெட்டினார். முதல் எதிரி எனக்கு மூன்று தடவைகள் கொட்டனால் அடித்தார். நாங்கள் எங்கள் வீட்டு அறையினுள் ஓடி ஒளிந்தோம். 4-ம் எதிரி எங்கள் வீட்டுக் கதிரைகள் மூன்றை கத்தியால் வெட்டினார். அத்துடன் வாங்கு ஒன்றையும் வெட்டினார். மற்ற எதிரிகள் கதவை உடைத்தனர். பின்னர் எதிரிகளின் மனைவிமார் வந்து அவர்களைக் கூட்டிச் சென்றனர். நாங்கள் அயல் வீடான கந்தையா வீட்டுக்கு ஓடினோம். பின் அங்கிருந்து காரில் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். நான் மூன்று நாட்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினேன். இச்சண்டைக்கு கோவில் தகராறு ஒன்றே காரணம்.

இவ்வாறு வெட்டிக் காயப்படுத்திய வழக்கொன்று சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ரூபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாட்சியமளித்த கணபதிப்பிள்ளை மகேஸ்வரி என்னும் இளம் பெண் கூறினார்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 24-ந் திகதி கே. மயில்வாகனம், கே. கார்த்திகேசு, எம். விஞசித்தம்பி, எஸ். சின்னத்தம்பி ஆகியோர் சாவகச்சேரித் தொகுதியில் உள்ள கரம்பகம் என்னுமிடத்தில் கே. கணபதிப்பிள்ளை வீட்டினுள் பிரவேசித்து அவரையும் மற்றும் சிலரையும் தாக்கியதாகவும் அதே சமயத்தில் கூரிய கத்தியால் வெட்டியதாகவும் சில வீட்டுத் தளபாடங்களைச் சேதம் பண்ணியதாகவும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் திரு. வி. தம்பித்துரை, புறக்டர் திரு சி. பாலகிருஷ்ணனின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளிதரப்பில் புறக்டர் திரு. வி. செல்லத்தம்பி சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜண்ட் திரு. வி. செல்லையாவின் அனுசரணையுடன் வழக்கை நடத்தினார்.

முன்னாள் சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. யு. ஜி. டி. சில்வா சாட்சியமளிக்கையில், தான் சம்பவதினம் மாலை 5-50க்கு கணபதிப்பிள்ளையினது வீட்டிற்குச் சென்றதாகவும் அங்கு நான்கு கதிரைகளும் கதவும் கத்தியால் வெட்டுப்பட்டும் உடைபட்டும் இருந்தன என்றும் பின்னர் சாட்சிகளின் முறைப்பாட்டைப் பதிந்ததாகவும் தெரிவித்தார். மற்றும் பொலிஸ்சார்ஜண்ட் ரீ செல்லையா, க. கணபதிப்பிள்ளை ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

எதிரியின் அட்வகேட் டாக்டரை சாட்சியத்துக்கு அழைத்தல் வேண்டுமெனக் கோரியதற்கிணங்க மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை டிசம்பர் 6ந் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

# பெண்களுக்குத் தனிப் பாடசாலை வேண்டும்.

புன்னாலைக்கட்டுவன்

சனி

"தமிழ்க்கலை, கலாசார மரபின்படியும், இன்றைய சமுதாய நிலையின் படியும், பெண்களுக்குத் தனிப் பாடசாலையிருப்பதே விரும்பத்தக்கது மேலும், கிராமப்புறங்களிலிருந்து அதிக சிரமமும் அலைச்சலுமுற்று நகர்ப்புற மகளிர் பாடசாலைகளை நாடி எமது சிறுமியர் செல்வதைத் தடுக்கவும் இந்நோக்கம் உதவும் "என கல்வி அமைச்சைக் கோரும் தீர்மானம் உரும்பிராய் இந்துக் கல்லூரிப் பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. சங்கத் தலைவர் திரு அ. வைத்தியலிங்கம் தலைமைவகித்தார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரியிற் படிக்கும் மாணவிகளுக்கு, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையையோ அன்றி உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையையோ ஒரு மகளிர் கல்லூரியாக்க வசதியுண்டென்றும், இதைப் பெற்றாரும், பழைய மாணவரும் வரவேற்பதாகவும். இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய ஆசிரியர் திரு. எஸ். ஐ பாத்துரை கூறினார்.

விரைவில் இம்மாற்றம் பற்றி உரும்பிராய் இந்துக் கல்லூரிப் பெற்றார் ஆசிரியர் தூதுகோஷ்டி ஒன்று கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளையைப் பேட்டிகாண விருப்பதாகத் தெரிகிறது.

# இரவல் நகையுடன் சென்றவரைக் காணவில்லை

உடுப்பிட்டி, சனி


இரவல் நகை வாங்கிய இளம்பெண் ஒருவர் தன் காதலனுடன் மாயமாய் மறைந்துவிட்டாராம். இச்சம்பவம் நாவற் கோவில் என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாவற் கோவிலிலுள்ள இளையதம்பி என்பவரின் இளைய மகள் அயல் வீட்டுப் பெண்ணிடம் செல்வச்சந்நிதிகோவிலுக்குச் செல்வதாகக் கூறி இரவலாக நகைகளை வாங்கிச் சென்றதாகவும் பின்னர் திரும்பவில்லையெனவும் பணியில் இருக்கும் அவரது காதலனுடனே ஓடிப் போயிருக்கக் கூடுமென்று பொலிஸில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிசார் அவ்விளம்பெண்ணையும் காதலனையும் தேடி வருகின்றனர்.

# டிசம்பரில் வட்டுக்கோட்டை கி. ச. தலைவர் தெரிவு

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டை கிராம சபையின் தற்போதைய தலைவர் திரு. செ சின்னத்தம்பியின் இராஜினாமாவைத் தொடர்ந்து புதிய தலைவரை தெரிவதற்கான தேர்தல் டிசம்பர் மாதம் 9-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கிராமசபைமண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தலைவருக்கான போட்டியில் மூவர் போட்டியிடுவார்கள் என தெரியவருகின்றது. திரு. சின்னத்தம்பி, சுகயீனம் காரணமாகவே தனது தலைவர் பதவியை இராஜினாமா செய்வதாகத் தெரிவித்திருந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்பகுதி கோஷ்டியிடம் மாநகரசபை தோற்றது

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நான்கு மாதங்களுக்கு முன்னர் யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்றபொழுது குழப்பத்தில் முடிந்த கல்விப்பகுதியினருக்கும் யாழ். மாநகரசபை ஊழியர்களுக்கும் இடையேயான உதைபந்தாட்டப் போட்டி மீண்டும் யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்றது. கடுமையான போட்டியின் பின்னர் கல்விப்பகுதியினர் மாநகரசபையினரைத் தோற்கடித்தனர். அமைதியான முறையில் நடைபெற்ற இம் 'மோதல்' ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் அருமையாக இருந்தது. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் கல்விப் பகுதியினரே முதலில் ஒரு கோலை விளாசினர். வலதுகரை வீரர் கணேசலிங்கம் அருமையாக 'பாசிங்' செய்த பந்தை மத்திய முன்னணி வீரர் ஸ்ரானிஸ்லோ எதிர் கோஷ்டியில் கோல்காப்பாளரின் பிடியில் இருந்து திருப்பி லாவகமாக கோலுக்குள் உருட்டிவிட்டார்.

இதையடுத்து மாநகர சபையும் ஒருகோலைப்போட்டது. வலதுகரை வீரர் பத்மசுந்தரத்தினால் அபாரமாக 'பாசிங்' செய்யப்பட்ட பந்தை வரதராசன் என்னும் மத்திய முன்னணி வீரர் அதிரடிபோட்டு அதைக்கோலுக்குள் வெளுத்து வாங்கினர்.

இடைவேளைக்குப் பின் ஆட்டம் அருமையாக இருந்தது. மாநகரசபைக் கோஷ்டியினர் பல கோலடிக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர். எனினும் பின்னணி வீரர் மரியநாயகம் அற்புதமாக அடித்து அருமையாக ஆடினார். கல்விப்பகுதியின் முன்னணிவீரர் தேவபாலன் மேலும் ஒருகோலை அரிதாக விளாசினார். கல்விப் பகுதியின் பின்னணிவீர இருபாகரனின் அடிகள் அபாரமாகவிருந்தன.

கணேசலிங்கம் பாராட்டுக்குரியவர். இப்போட்டி முடிவில் கல்விப்பகுதி 2—1 கோல்களால் மாநகரசபைக் கோஷ்டியை வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு இராசலிங்கம், திரு சற்சிவகராயர் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

கல்விப் பகுதியினருக்கும் தபால் பகுதியினருக்கும் இடையே இந்த 'நொக்கவுட்' சுற்றுப்போட்டியின் சாம்பியன் போட்டி நடைபெறும் இப்போட்டி 29-ம் திகதி யாழ். விளையாட்டரங்கில் நடைபெறும்.

## சென்ற். அந்தனிஸ் விளையாட்டுக்கழகம்

திருநெல்வேலி, ஞாயிறு பாலையூர் சென்ற். அந்தனிஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக வண. பிதா கே. பி. சந்தியாப்பிள்ளையும், செயலாளராக திரு எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளையும் பொருளாளராக பி. அந்தோனிப்பிள்ளையும் தெரிவுசெய்யப்பட்டதோடு ஆறு பேர் கொண்ட நிர்வாகக்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

உதைபந்தாட்டம்

# யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் வென்றனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு சென், ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் கோஷ்டிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சினேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இடைவேளைக்குப் முன்னர் நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியே முதலாவது கோலைப் போட்டது. சென். ஜோன்சின் கோல் அடிக்கும் முயற்சிகள் யாழ்ப்பாணக் கல்லூரியின் பின்னணி வீரர்களால் முறியடிக்கப்பட்டன. இடைவேளையின் போது சென். ஜோன்ஸ் ஒரு கோலும் போடாதவகையில் யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு கோல் போட்டிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் போட்டியின் தரம் உயர்வாகக் காணப்பட்டது. இரு சாராரும் பலப் பரீட்சையில் ஈடுபட்டனர். சென். ஜோன்ஸ் சில நிமிட நேரத்தில் ஒரு கோலைப் போட்டுக்கொண்டது.

இப்போட்டி முடிவில் இரு கோஷ்டியும் தலா 1—1 கோல்கள் பெற்று வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தன. இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## உபந்யாசம்

யாழ்ப்பாணம், ஞாயிறு சண்டிலிப்பாய் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் கார்த்திகை சோமவார விழாவை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 6-30 மணி தொடக்க திரு. த. குமாரசாமிப் புலவர் 'தேனினும் இனிய திருவாசகம்' என்னும் விஷயம் பற்றி ஓர் உபந்நியாசம் நிகழ்த்துவார்.

'நொக்கவுட்' உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

# 'ஒலிம்பிக்' கழகத்துக்கு சாம்பியன் கேடயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற 'நொக்கவுட்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சாம்பியன் போட்டியில் தெல்லிப்பழை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் சாம்பியன் கேடயத்தை தனதாக்கிக் கொண்டது. நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகமும் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகமும் இறுதி சாம்பியன் போட்டிக்காக மோதிக் கொண்டது. ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இச்சங்கத்தின் 'லீக்' சுற்றுப் போட்டியில் கூட்டுச் சாம்பியன்களாக குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் ஜெலிஸ்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் தெரிவு செய்யப்பட்டன.

'நொக்கவுட்' சுற்றுப் போட்டியின் சாம்பியன் போட்டியில் கலந்து கொண்ட சென். மேரீஸ் கோஷ்டியும், தெல்லிப்பழை ஒலிம்பிக் கோஷ்டியினரும் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் நன்றாக ஆடி அருமையான போட்டியை ரசிகர்களுக்கு அளித்தனர். இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் முதலில் கோல் போட்டவர்கள் ஒலிம்பிக் வீரர்களே. சென். மேரிஸ் முன்னணி வீரர்கள் பல தடவைகள் கோல்கள் போட முயற்சித்து தோல்வி கண்டனர். எனினும் அவர்களது முயற்சிகள் ரசிக்கத்தக்கதாக இருந்தது. இடைவேளையின் போது சென். மேரிஸ் ஒரு கோலும் போடாதவகையில் ஒலிம்பிக் கோஷ்டியினர் ஒரு கோல் பெற்றிருந்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆசிய விளையாட்டுகளில் இந்தியா பங்குபற்றாது

புதுடில்லி, நவ. 26 பாங்கொக்கில் நடைபெறவிருக்கும் ஐந்தாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா கலந்து கொள்ள மாட்டாது என்று இங்கு அறிவிக்கப்பட்டது. விளையாட்டுச்சங்கம் 104 அங்கத்தவர்களுக்கு அந்நியச்செலாவணி கேட்டிருந்ததென்றும், 81 பேருக்கு மேல் அந்நியச் செலாவணி அனுமதிக்க முடியாது என்று மத்தியநிதி மந்திரி மறுத்து விட்டதாகவும் தெரிகிறது. இதன் காரணமாகவே இந்தியா கலந்து கொள்ளவில்லை.

## யூனியன் விளையாட்டுக்கழகம்

திருநெல்வேலி, ஞாயிறு ஆனைக்கோட்டை யூனியன் இளைஞர் மன்றத்தின் சார்பில் புதிய விளையாட்டுக்கழகமொன்று அண்மையில் அங்குராப்பணம் செய்யப்பட்டது. யூனியன் உதைபந்தாட்டக்கழகம் என்ற பெயரில் நிறுவப்பட்டிருக்கும் இதற்கான விளையாட்டு மைதானம் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்துக் கருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது.

## சங்கிலியன் வென்றான்

சங்கானை, சனி வண்டத்தரிப்பு சங்கிலியன் விளையாட்டுக் கழகத்தினருக்கும் பலாலி (சங்கறிமென்) காலாற்படையினருக்குமிடையில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சினேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 4-1 கோல்களால் சங்கிலியன் கோஷ்டியினர் வெற்றியீட்டினர்.

உங்கள் வீட்டுக்கும் தொழிற்சாலைக்கும்

எஸ்-லோன்
மழைநீர்க் குழாய்கள்,
கீழ்த்தரைக் குழாய்கள்

வீடுகள், தொழிற்சாலைகள் சேகரஸ்தலங்கள் ஆகியவற்றுக்கு எஸ்-லோன் மழைநீர்க் குழாய்களும் கீழ்த்தரைக் குழாய்களும் இயற்கையாகவே தெரிவு செய்யப்படுகின்றன.


காரணம் எஸ - லோன் கறள் பிடிக்காதது, இலேசானது, வாங்கி பதிப்பதற்கு மிகவும் சிக்கனமானது

உறுதியான, நம்பிக்கையான, விலைமலிவான எஸ்-லோன் மழை நீர்க்குழாய்கள் கீழ்த்தரைக் குழாய்களை உபயோகித்து அதிக பணத்தை மீதப்படுத்துங்கள்.
இவற்றினால் பிற்பாடும் பணம் மீதமாகும். காரணம் எஸ் - லோன் மழைநீர்க் குழாய்களும் கீழ்த் தரைக் குழாய்களும் வருடக்கணக்காக நின்றுபிடிக்க வல்லனவாகையால் பணஞ் செலவிட்டு மாற்றுக் குழாய்கள் பொருத்த வேண்டிய அவசியமேற்படாது.

எஸ்-லோனைப் பார்க்கிலும் சிறந்ததொன்றை நீங்கள் குறிப்பிட முடியாது.

எஸ்-லோன்

உற்பத்தியாளர்:
ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்







எஸ் - லோன் உலகமெங்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதற்குத் துணை செய்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டர்படை திருடர் தொல்லையைத் தடுக்க

திருநெல்வேலி, சனி

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் திருடர்களின் தொல்லையை தடுக்குமுகமாக பொலிசாருடன் இரவு நேரங்களில்ரோந்து சுற்றும் பொருட்டு கிராமங்கள் தோறும் தொண்டர்படையினர் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

இதன்பொருட்டு அரியாலையைச்சேர்ந்த பதினெட்டு இளைஞர்கள் இத்தொண்டர்படையில் நேற்றையதினம் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இவர்களது கைவிரல் அடையாளங்கள் பொலிசாரால் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு இவர்களுக்குவிரைவில் பொலிசாரால் அடையாள அட்டைகளும் வழங்கப்படும்.

---

## சாதிக்கொடுமை. . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று சேர முடியுமாயின் பிற்போக்குச் சக்திகளுக்கெதிராக எல்லா முற்போக்கு சக்திகளும் திரண்டெழ முடியாதா? மூன்று லட்சம் முஸ்லிம்களைக் கொண்ட ஸான்சிபார்தீவு, இந்தியாவையும் இலங்கையையும்விட நூறு மடங்கு சாதிக் கொடுமை நிறைந்த திபெத் பிரதேசம் புரட்சிப் பாதை காட்டிய இடது சாரித் தலைவர்களின் கீழ் தான் விடுதலையடைந்து தொழில் அபிவிருத்தி, பொருளாதார முன்னேற்றம் கண்டுள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராக இன்று நீக்ரோ மக்கள் ஆயுதம் தாங்கிப் போராடும் நிலையில் உள்ளனர். இவற்றுக்கெல்லாம் காரணம் புரட்சிதான்.

ஆலயப் பிரவேசத்தால் மட்டும் சாதிக் கொடுமை ஒழியப் போவதில்லை. இந்நாட்டில் உள்ள பெரும்சாதி கீழ்ச்சாதி என்ற சமுதாய அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும். இதற்குச் சத்தியாக்கிரகமூலமோ சமாதான முறையிலோ பரிகாரம் காண முடியாது. புரட்சி ஒன்றே இதற்கு வழிவகுக்கும். எனவே, இன்று விடுதலைப் போராட்டம் நடத்த முற்பட்டிருக்கும் தொழிலாளிவர்க்கம் அடக்குமுறையை எதிர்த்து புரட்சிப் பாதையில் சென்றுதான் வெற்றி காணப் போகிறார்கள்.

திரு இளங்கீரன் பேசுகையில், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டுவரும் ஒடுக்கப்பட்ட மக்கள் சமத்துவமாக வாழ- இங்கு வாழும் ஒடுக்கப்பட்ட ஐந்து லட்சம் மக்களும் ஒன்று திரண்டு செங்கொடியின் கீழ் போராட வேண்டும் என்றும் அப்போதுதான் ஈழத்தின் சரித்திரம் மாற்றியமைக்கப்படும் என்றும் கூறினார்.

நீர்வை பொன்னையாபேசுகையில், அச்சுவேலியில் கூடிய மகாநாட்டில் எல்லா அரசியல் கட்சிகளும் அழைக்கப் பட்டும் இன்று நாம் நடத்தும் இயக்கத்திற்குஎக் கட்சியாவது ஆதரவு தரவில்லை என்றார்.

திரு. வி. ஏ. கந்தசாமி பேசுகையில், இந்நாட்டில் தொழிலாள வர்க்கம் தொடாத பிரச்னைகளேயில்லை என்றார். "அரசாங்க அதிபர் குறித்த காலத்தில் தீண்டாமைப் பிரச்னையைச் சமுகமாகத் தீர்க்கத் தவறினால் முற்போக்கு சக்திகள் ஒன்றுகூடி தேநீர்க் கடை, ஆலயப் பிரவேசம் நடத்துவது தவிர்க்க முடியாதது" என்றும் திரு. கந்தசாமி கூறினார்.

டாக்டர் சீனிவாசகம், டானியல், அந்தனி சில், இராசா ஆகியோரும் பேசினர்.

---

## புதிய சமாதான நீதவான்



யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் யாழ்ப்பாணப் பகுதி சமாதான நீதவானாக நியமிக்கப் பட்டுள்ளார்.

திரு. வே. சுப்பிரமணியம் நாற்பது வருடகாலமாக காரைநகர் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி 1964-ம் ஆண்டில் இளைப்பாறினார். இவர் காரைநகர் இந்துக் கல்லூரியின் தாபகர் திரு. மூ. சயம்பு உபாத்தியாயரின் அரிய மாணுக்கனுகக் கல்வி பயின்றபின் அதே கல்லூரியில் ஆசிரியத் தொண்டு புரிந்தார்.

கூட்டுறவு இயக்கங்களில் ஈடுபட்டு தன் கிராமத்திலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கடமை புரிந்து வருகிறார்.

மூளாய் கூட்டுறவு ஆங்கில வைத்தியசாலையின் முன்னாள் கௌரவ காரியதரிசியாகவும், பின்பு அதன் உப தலைவராகவும்பலகாலம் தொண்டு செய்து வந்துள்ளார். தனது கிராமத்தில் 1948-ம் ஆண்டில் கூட்டுறவுப் பண்டசாலை தாபித்து அதன் கௌரவ காரியதரிசியாகக் கடமையாற்றியது மல்லாமல் கிராமமுன்னேற்றச் சங்கத்தையும் தாபித்து உழைத்துள்ளார். முன்னாள் தீவுப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தில் தலைவராகவும் கடமைபுரிந்துள்ளார்.

யாழ்ப்பாண கூட்டுறவு மாகாண வங்கியின் கௌரவ காரியதரிசியாகவும் கடமைபுரிந்து வருகிறார். இவர் சமயத்தொண்டில் ஈடுபட்டு காரைநகர் மணிவாசக சபையின் தலைவராகவும் நியமிக்கப்பெற்றுள்ளார்.

---

## கல்வி மந்திரி பார்வையிடுவார்

கொழும்பு, சனி

அக்டோபர் மாதம் மூதவாந்திகதிதொடக்கம் பரவலாக்கப்பட்டு கல்வி அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்ட பிராந்திய கல்வி திணைக்களங்களை கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல தானுகவே சென்று நேரடியாக பார்வையிட தீர்மானித்துள்ளாரென கல்வி அமைச்சினுல் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## நன்னடத்தைப்பிணை

### மாமியின்வீட்டுக்கு தீவைத்தவருக்கு

மாவிட்டபுரம், சனி

மாமியின்வீட்டுக்குத் தீ வைத்தமருமகன்குற்றத்தை ஒப்புக்கொள்ளவே மாஜிஸ்திரேட் மருமகனை மூன்று வருடகாலத்திற்குநன்னடத்தைப்பிணையில் இருக்கும் படியும் 50ரூபாய்முடிக்குரிய செலவாகக் கட்டும் படியும் உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் காங்கேசன் துறையைச் சேர்ந்த பாக்கியம் துரைச்சாமியின் வீட்டிற்கு சென்றஜூலை மாதம் நாலாந்திகதி அவரின் மருமகன் நடராசா தாமோதரம்பிள்ளை தீவைத்ததாகக் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

---

## சட்ட விரோதமாக சூதாடினுர்களாம் 12 பேர் கைது

திருநெல்வேலி, சனி

சட்டவிரோதமாகச் சூதாடினுர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் சுமார் பன்னிரண்டு பேரைக் கொண்ட கோஷ்டியொன்றை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்றையதினம் கைதுசெய்தார்கள்.

யாழ்ப்பாணம் டொலிவிதியிலுள்ள ஒரு மேல்மாடிக் கட்டடித்தில் நேற்றுமாலை சூதாடிக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் இக்கோஷ்டியினரை யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சுந்தரயா, குற்றத்தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. சிவபாதம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த சண்முகம் வேலாயுதம், கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் ஆகிய இருவரும் சூதாடிக் கொண்டிருந்ததாகவும் மற்றையவர்கள் இவர்களுக்கு சூதாட்டத்தில் உடந்தையாக இருந்ததாகவும் சொல்லப்படுகின்றது. கைதுசெய்யப்பட்டவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

---

## அட்வக்கேட் மீதான வழக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், சனி

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த அட்வகேட். திரு. முருகேசு ஆலாலசுந்தரத்திற்கு எதிராக வோக்குவரத்துச் சட்டத்தின் கீழ் நாலு குற்றங்கள் சாட்டி சுன்னாகம் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். திறிசிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரிதான் விசாரணைக்கு ஆயத்தமில்லையென்றும் வழக்கை வேறோர் திகதிக்கு ஒத்திவைக்கும்படியும் தனது வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா மூலம் விண்ணப்பித்தார். இதனை ஏற்ற மாஜிஸ்டிரேட்வழக்கை அடுத்த வருடம் ஜனவரிமாதம் ஐந்தாம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

---

## ஒலிம்பிக் கழகம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சென். மேரிஸ் கோஷ்டியினருக்கு எதிர்பாராதவிதமாக ஒரு 'பெனல்டி' கிடைத்தது. அதையும் தவறவிட்டனர். சென். மேரீஸ் கோஷ்டியினர் பின்னணி வீரர்கள் மைக்கல்தாசன், சேவியர், கோல் காப்புவீரர் அமிர்தநாதர் ஆகியோரின் நன்ருக விளையாடினர். ஒலிம்பிக் கோஷ்டியின் பின்னணிவீரர் பாலநாதனின் ஆட்டம் அருமையாகவிருந்தது.

இப்போட்டி முடிவில் தெல்லிப்பழை ஒலிம்பிக்கழக 1 — 0 கோலால் நாவாந்துறை சென். மேரிஸ் கோஷ்டியை வெற்றியீட்டி சாம்பியனுனது. இப்போட்டிக்கு திரு. கே. நாகமணி மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

# "இரத்ததானம் செய்வதை சேவையாக கருதவேண்டும்"

## மரணவிசாரணை அதிகாரி குறிப்பு

திருநெல்வேலு, ஞாயிறு

"காலஞ்சென்றநோயாளியின் உறவினர்கள் பலர் இரத்ததானம் செய்யக்கூடிய நிலையிலிருந்தும் அவருக்கு இரத்தம்வழங்க முன்வராதது மிகவும் வருந்தத்தக்கதாகும். இதனுல் ஒரு உயிரையே வீணுக இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களில் யாராவது அவருக்கு இரத்தம் வழங்கியிருந்தால் சில வேளைகளில் அவர் இறக்காமல் இருந்திருக்கலாம்.

பொதுமக்களில் பலர் இரத்ததானம் செய்வதை ஒரு வியாபாரமாகக்கொண்டுள்ளார்கள். இந்த நிலைமாற, அனைவரும் இரத்ததானம் செய்வதை ஒரு சேவையாகவும், பொதுத் தொண்டாகவும் கொண்டு இரத்ததானம்செய்ய முன்வரவேண்டும். அதனுல் பல உயிர்களை காப்பாற்றமுடியும்."

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் காலமான சின்னையா மார்க்கண்டு (வயது 42) என்பவரது மரணவிசாரணையின் போது திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ், கனகரெத்தினம் தெரிவித்தார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நபர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலிருந்து இம்மாதம் 21-ந் திகதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப் பட்டதாகவும், இவருக்கு 'அப்பெண்டிக்ஸ்' சுகயீனம் காரணத்தால் சத்திர சிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதென்றும், ஆனுல் அவருக்கு வேண்டிய இரத்தம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இல்லாததால் அவரது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டும் அவர்கள் யாரும் இரத்தம் வழங்கவில்லை என்றும், இதனுலேயே அவர் இறந்திருக்கலாம் எனவும் மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது,

டாக்டர் செல்வி எம். ஏ. ஆனந்தர், டாக்டர் வி. விநாயகமூர்த்தி ஆகியோரும் சாட்சியமளித்த பின்னர் மரணவிசாரணை அதிகாரி இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

---

## நாயால் கடிக்கப்பட்டவர்

திருநெல்வேலி, ஞாயிறு

சிலமாதங்களுக்குமுன்னர் குட்டி நாயொன்றினுல் கடிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் இப்போது நாயைப்போன்ற சில சேஷ்டைகளைச் செய்து வருவதாகத் தெரிகின்றது.

கரணவாயைச் சேர்ந்த ஆர். கைலாசபிள்ளை என்ற 24 வயது இளைஞரான இவர் தற்போது சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார் எதுவுமே பேசமுடியாத நிலையில் வாயால் நுரையைக் கக்கியபடி இருக்கும் இவரை டாக்டர் திரு. முத்தையா கவனித்து வருகின்றார்.

---

## மாவட்டசபைகள் . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

தமிழரசுக்கட்சியின் காரியக்கமிட்டி திருகோணமலையில் அடுத்த மாதம் 10,11ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது. இக்கூட்டத்தில் தற்போது எழுந்துள்ள அரசியல் சூழ்நிலைபற்றியும், அமைச்சர் திருச்செல்வம் தலைமைப்பீடத்துக்கு அனுப்பியுள்ள கடிதம் பற்றியும் அக்கடிதம் எழுதப்படுவதற்கான காரணம் பற்றியும் ஆராயும் என்று தெரிகின்றது.

---

## 'ஆசனங்களை சூடேற்றுவதல்ல எமது வேலை'

### எம். பி. கூறினுர்

நாவலப்பிட்டி, சனி

"நாங்கள் மக்களின் பிரதிநிதிகளாகத்தெரிவு செய்யப்பட்டது பாராளுமன்ற ஆசனங்களுக்கு சூடேற்றுவதற்காகவல்ல; மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காகவே."

இவ்வாறு சமாதான நீதவானுக திரு. டபிள்யூ. வி. தெயாளிஸ் தெரிவு செய்யப்பட்டதை பாராட்டுமுகமாக உடுமை மஹாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உடுநுவர எம், பி. திரு. டி. பி. விஜயதுங்கா கூறினுர்.

"மேலும்அவர்பேசுகையில் தேசிய அரசாங்கம் பதவியேற்றதைத் தொடர்ந்து பல பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளன. பிரதமரின் திறமையினுல் முன்பு இருந்த சீர்கேடுகள் ஒழிக்கப்பட்டு வருகின்றன. சமூக தேசிய ஒற்றுமையினுல் பொருளாதார முன்னேற்றத்தை உண்டுபண்ணுவதே எமது கொள்கை" என்ருர் மற்றும் பலரும் பேசினர்.

---

## 'பயனுள்ள பயணம்'

### பிறவுண் அறிவிப்பு

லண்டன், நவ. 26

"மாஸ்கோவுக்குநாம்மேற்கொண்ட பயணம் பயனுள்ளதே" என பிரிட்டிஷ்வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிறவுண் இங்கு தெரிவித்தார்.

மாஸ்கோவில் மூன்றுநாட்கள் தங்கிவிட்டு திரும்பியுள்ளதிரு. பிறவுண்தாம் ரஷ்யத்தலைவர்களுடன் வியட்னும்பிரச்னை, கிழக்கு மேற்கு உறவுகள், படைக் குறைப்பு ஆகியவை சம்பந்தமாக முக்கிய பேச்சுவார்த்தை நடத்தியதாக பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிற் கூறினுர்.

---

## தடுப்பு மருந்து விநியோகம்

உடுப்பிட்டி, சனி

மருத்துத்துறை சுகாதார இலாகாவைச் சேர்ந்த தொற்றுநோய் தடுப்பியக்கத்தினர் சுகாதாரப் பரிசோதகர் திரு. இராசநாயகம் தலைமையில் கரணவாய் வதிரி, கரவெட்டி, பகுதிகளில் இளம் பிள்ளைவாத தடுப்பு மருந்து விநியோகித்து வருகின்றனர்.

---

## இடமாற்றம்

வவனியா, சனி

பரந்தன் தபால் அதிபராக கடமையாற்றிய திரு. கே. இராமச்சந்திரன் உத்தியோக உயர்வுபெற்று ஜனவரி முதலாம்திகதி தொடக்கம் அநுராதபுரத்தில் தபால் அத்தியட்சகர் காரியாலயத்தில் பிரதமலிகிதராகக் கடமையாற்றுவார்.

° ° °

வவனியா கச்சேரியில் பிரதம லிகிதராக கடமையாற்றிய திரு. யோசேப் இம்மாதம் தொடக்கம் மன்னார் கச்சேரிக்கு பிரதம லிகிதராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org